# அத்தியாயம் 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

## 4.1 பொதுநோக்கு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் (கொநுவிசு 2002 = 100) அளவிடப்பட்டவாறு பொது விலை மட்டம் 2008இன் இறுதியில் 14.4 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைவதற்கு முன்னர் 2008 யூனில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மிக உயர்ந்த பணவீக்க வீதமான 28.2 சதவீதத்தினை அடைந்து முதலரையாண்டில் விரைவாக தொடர்ந்தும் அதிகரித்தது. ஆண்டுச் சராசரி பணவீக்க வீதம் 2007இன் இறுதியிலான 15.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 22.6 சதவீதத்திற்கு உயர்ந்தது. கடந்த காலத்தில் நிலவிய மோசமான நாணய நிலைமைகளின் காலங்கடந்த தாக்கம் அதேபோன்று பண்ட விலைகளில் ஏற்பட்ட மோசமான அபிவிருத்திகள் என்பன 2008இன் முதலரைப்பகுதியில் சுட்டெண் பெறுமதிகள் அதிகரிக்க காரணமாயின. ஆண்டின் முதலரைப்பகுதியில் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மைப் பண்டங்களின் குறைந்த நிரம்பல், இறக்குமதிகளின் குறிப்பாக பன்னாட்டுச் சந்தையில் உணவுப் பொருட்கள், மசகெண்ணெய் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் உயர்ந்த விலைகள் தூண்டுதலாக அமைந்தன. 2008 மே பிற்பகுதியில் எரிபொருள் விலைகளின் மேல் நோக்கிய திருத்தங்கள் கொநுவி சுட்டெண் மட்டத்தில் ஏற்பட்ட கூடிய அதிகரிப்பு மீது பெருமளவு தாக்கத்தைக் கொண்டிருந்தன. எனினும், இப்பாதகமான அபிவிருத்திகள், உள்நாடு மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டிலுமான பல முக்கிய காரணிகள் காரணமாக இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் குறைக்கப்பட்டன. மத்திய வங்கியால் பயனுறும் வகையில் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை பணவீக்க அழுத்தங்களை குறைவடையச் செய்து அதன் மூலம் சுட்டெண்ணினை குறைந்த வீதத்தில் உயர்வடையக் காரணமாயிற்று. சிறுபோகத்தில் முக்கியமாக அபரிமித நெல் விளைச்சல் காரணமாக உள்நாட்டு வழங்கலில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் பன்னாட்டுச் சந்தையில் பொருட்களின் விலைகள் குறைவடைந்தமை என்பன இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் சுட்டெண் விரைந்த மெதுவடைவுக்கு மேலும் உதவியது. அதேவேளை நாணயக் கொள்கை தொடர்பாக விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை காட்டுகின்ற பணவீக்க வீதமொன்றான மையப் பணவீக்கம் கொவிசுட்டெண் கூடையிலிருந்து உணவு மற்றும் வலு விடயங்களை நீக்கியதன் மூலம் பெறப்பட்டதுடன் 2008 செத்தெம்பர் வரை அதிகரித்துச் செல்லும் போக்கைப் பின்பற்றி 18.7 சதவீதம் கொண்ட உச்ச அளவைப் பதிவு செய்த போதிலும் பின்னர் 2008 திசெம்பரில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில்







15.7 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. இது போன்றே ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமும் 2007இன் 7.7 சதவீதத்திலிருந்து 2008இல் 13.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**2008இல் அரசதுறை, முறைசார் தனியார்துறை மற்றும் முறைசாராத் தனியார்துறை ஆகிய சகல மூன்று துறைகளினதும் பெயரளவுக் கூலிகள் அதிகரித்தன.** எனினும், அரசதுறை மற்றும் இறப்பர் மற்றும் தெங்குத் துணைத்துறைகள் தவிர்ந்த முறைசாரா தனியார்துறையிலுள்ள ஊழியர்கள் 2007 உடன் ஒப்பிடுகையில் 2008 உண்மைக்கூலி இழப்புக்களை அனுபவித்தனர். இதேவேளை, கூலி நிர்ணயச் சபைகளின் வர்த்தகங்களின் ஆளுகைக்குட்பட்ட சகல தொழிலாளர்களுக்குமான ஆகக் குறைந்த கூலிகளிலான அதிகரிப்பு அவர்களின் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களை 23 - 30 சதவீதத்தால் உயர்த்துவதில் கணிசமான சாதகமான விளைவைக் கொண்டிருந்தது. ஆனால், இது 2008 அவர்களின் உண்மைக் கூலிகளில் 2.6 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பை மட்டுமே கொண்டிருந்தது. 2008இல் இரு தடவைகளில் வாழ்க்கைச் செலவுப்படியின் மேல் நோக்கிய திருத்தத்திற்கு மத்தியிலும் இவை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளை எதிரீடு செய்வதற்குப் போதாமையால் அரசதுறை ஊழியர்கள் 12 சதவீதம் கொண்ட கூலி இழப்புக்களால் பாதிப்புற்றன. முறைசாராத் துறையில் பெயரளவுக் கூலிகள் 2008இல் அதிகரித்த போதிலும் கட்டடவாக்கத் துறைகள், தேயிலை மற்றும் இறப்பர் துணைத் துறைகள் தவிர்ந்த வேளாண்மையிலுள்ள பல துணைத்துறைகள் உண்மை கூலி இழப்புக்களால் பாதிப்புற்றனர். அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் இரு பகுதியினரதும் பெயரளவுக் கூலி அதிகரிப்புக்களிலிருந்து எழும் விலைகள் மீதான கேள்விப் பக்க அழுத்தம் மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையால் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது.

**தொழில் வாய்ப்பின்மை வீதம் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைத் தொடர்ந்ததுடன் 2008ஆம் ஆண்டில் மூன்றாம் காலாண்டில் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** பொருளாதாரத்தின் புதிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல், ஆயுதப் படைக்கும் அரச துறைக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டமை என்பன இவ்வபிவிருத்திக்கு உதவியது. உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் தொழில் வாய்ப்புக்களை, குறிப்பாக இளைஞர்களிடையே உருவாக்கின.

## 4.2 விலைகள்

### விலை அசைவுகளுக்குப் பங்களிப்புச் செய்த காரணிகள்

**உள்நாட்டுப் பொருளாதாரத்தில் விருத்தியடைந்த கேள்வி மற்றும் வழங்கல்பக்கக் காரணிகள் இரண்டும் மற்றும் பன்னாட்டுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட விரைவான தளம்பல்களும் 2007 நடுப்பகுதியிலிருந்து 2008 இறுதி வரை இடம் பெற்ற விலை அசைவுகளுக்குப் பெருமளவிற்கு பங்களிப்புச் செய்தன.**

**2005 - 2006 காலப்பகுதியில் நாணய விரிவாக்கத்தின் காலம் கடந்த தாக்கம் 2007 முழுவதிலும் 2008இன் நடுப்பகுதிவரை கேள்வியால் தூண்டப்பட்ட பணவீக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டது.** எனினும், பொருளாதாரத்தின் பணவீக்க அழுத்தங்களின் அதிகரிப்பினைக் கருத்தில் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2006 முதல் இறுக்கமான நாணயக் கொள்கையை கடைப்பிடிக்கத் தொடங்கியது. இது 2008இன் இரண்டாம் காலாண்டினை நோக்கிய கேள்வி அழுத்தத்தினை கட்டுப்படுத்துவதற்கு கருவியாக அமைந்தது. இறுக்கமான ஒதுக்குப் பண இலக்குகளைக் கடைப்பிடிக்கும் விதத்தில் வர்த்தக வங்கிகளுக்கான நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளை மட்டுப்படுத்துதல் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை அடிக்கடி பயன்படுத்துகின்றவர்களுக்கு அவ்வசதிகளின் மீது தண்ட வட்டி வீதங்களை அறிமுகப்படுத்தியமை என்பன பண நிரம்பலின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த உதவியது. இதன் மூலம் பொருளாதாரத்தின் மீதான கேள்வி அழுத்தம் கட்டியெழுப்பப்படுவது கட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி குறுகிய பணநிரம்பலின் புள்ளிக்குப் புள்ளி வளர்ச்சி 2006இன் 12.6 சதவீத மட்டத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் 2.7 சதவீதத்திலும் 2008இல் 4.0 சதவீதத்திலும் கட்டுப்படுத்தப்பட்டது. விரிந்த பணத்தின் விரிவாக்கமும் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 2006இன் 17.8 சதவீதத்திலிருந்து 2007ஆம் 2008ஆம் முறையே 16.6 சதவீதத்திற்கும் 8.5 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது. இக்கொள்கை வழிமுறைகள் பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களை குறைப்பதற்கு உதவின. எனினும் 2008 சனவரியில் அரசதுறை ஊழியர்களுக்கான கூலிகளில் செய்யப்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் 2008 யூலையில் வாழ்க்கைச் செலவுப்படியில் செய்யப்பட்ட சீராக்கங்கள் என்பன, அதிகரித்த கேள்வியினூடாக நுகர்வோர் விலைகளின் மீது குறிப்பிட்ட அழுத்தங்களைத் தோற்றுவித்தன.


**அட்டவணை 4.1** விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட மாற்றங்கள்

| சுட்டெண் | சராசரிச் சுட்டெண் | | | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 (அ) | டிசெ. 2007/ டிசெ. 2006 | டிசெ. 2008/ டிசெ. 2007 (அ) | 2007/2006 | 2008/2007 (அ) |
| கொநுவிசு (2002 = 100) | 140.8 | 163.1 | 199.9 | 18.8 | 14.4 | 15.8 | 22.6 |
| மொ.வி.சு | 2,351.5 | 2,924.4 | 3,653.6 | 26.8 | 0.7 | 24.4 | 24.9 |
| மொ.உ.உ.சுருக்கி | 224.9 | 256.4 (ஆ) | 298.3 | - | - | 14.0 | 16.3 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 4.1 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2002=100)




**2007 உடன் ஒப்பிடுகையில் அரிசி, மரக்கறிகள் மற்றும் தெங்கு போன்ற வேளாண்மைப் பொருட்களின் குறைந்த உள்நாட்டு வழங்கல்கள் காரணமாக உள்ளூர் வேளாண்மை உற்பத்திகளின் விலைகள் ஆண்டின் முதலரையாண்டு காலப்பகுதியில் பெருமளவில் அதிகரித்தன.** பெரும்போக நெல் அறுவடை மற்றும் மரக்கறியை பகுதியளவில் சேதமாக்கிய நாட்டில் பெய்த அளவுக்கதிகமான மழை இப் பொருட்களுக்கான கணிசமான விலை அதிகரிப்புக்களை ஏற்படுத்தின. மேலும், கோதுமை மாவின் அதிகரித்த விலையால் ஏற்படுத்தப்பட்ட பதிலீட்டு விளைவால் எழுந்த அதிகரித்த கேள்வி அரிசி விலைகள் மீது அழுத்தத்தைக் கூட்டியது. இதேவேளை, வேளாண்மையாளர்களிடமுள்ள தாங்கிருப்புக்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு மற்றும் நெல் கொள்வனவுக்காக தனியார் அரிசி ஆலையாளர்களின் போட்டியும் அரிசி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தது. இதன் விளைவாக அரிசியின் சில்லறை விலைகளும் 2007 ஒகத்திலிருந்து 2008 ஏப்பிறல் வரை 59 - 81 சதவீதம் வரையான வீச்சில் (மேல் மட்டம் சம்பா அரிசியின் விலை) உயர்வடைந்தது. எனினும் 2008 ஏப்பிறல் நடுப்பகுதியில் அரசாங்கத்தினால் அரிசியின் மீது விதிக்கப்பட்ட உச்சமட்ட விலை அரிசியின் விலை உறுதியடைவதற்கு உதவியது. சிறுபோகத்தின் அபரிமித அறுவடையின் காரணமாக அரிசி விலை உறுதியடைய பங்களித்தது. ஏப்பிறலிலிருந்து 2008 திசெம்பர் வரை அரிசியின் சராசரி சில்லறை விலை 2.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மீனின் அதிகரித்த உற்பத்திக்கு மத்தியிலும் மீன்பிடி மற்றும் போக்குவரத்துச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் மீனின் விலைகள் குறிப்பிடத்தக்களவில் தொடர்ச்சியாக அதிகரித்து 2008 ஓகத்தில் உச்ச அளவை அடைந்தது. சாதகமான வானிலை நிலைமை மற்றும் மீன்பிடிச் செயற்பாடுகள் சுமூகமாகத் தொழிற்பட்டமை காரணமாக 2008இன் பிற்பகுதியில் மீனின் வழங்கல் குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டது. எனினும், எரிபொருள் விலைகளின் கீழ் நோக்கிய திருத்தங்களைத் தொடர்ந்து குறைந்த போக்குவரத்துச் செலவுகள் காரணமாக 2008இன் இறுதிக் காலாண்டில் மீன் விலைகளில் ஏற்பட்ட சிறு வீழ்ச்சியைத் தவிர முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சராசரியாக விலைகள் தொடர்ந்தும் உயர்வாக விளங்கின. 2007 நடுப்பகுதியிலிருந்து 2008 ஏப்பிறல் வரை தெங்கு மற்றும் தேங்காய் எண்ணெயின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து அதன் பின்பு தெங்கு உற்பத்தியிலேற்பட்ட மேம்பாடுகள் காரணமாக வீழ்ச்சியடைந்தது.

**2008இன் முதல் அரைப்பகுதியில் எரிபொருள், திரவப்பெற்றோலிய வாயு, வளமாக்கி மற்றும் குறிப்பிட்ட ஏனைய முக்கிய உணவுப் பண்டங்களின் மீது உயர்ந்த பன்னாட்டு விலைகள் காணப்பட்டன.** 2008இல் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் சராசரி விலை 2007இன் பீப்பா ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 71 இலிருந்து 2008இல் பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 97 இற்கு 37 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை மசகெண்ணெயின் இறக்குமதி விலை 2008 திசெம்பரில் ஆகக் குறைந்த விலையான பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 46 இற்கு வந்த போதிலும் 2008 யூலையில் பீப்பா ஒன்றுக்கு ஐ.அ.டொலர்

அட்டவணை 4.2 இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கிய பொருட்களின் சில்லறை விலைகள்

| | விடயம் | அலகு | கொ.நு.வி.சு (2002=100) நிறை % | விலை - ரூபா | | | | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண்டுச் சராசரி | | | | | | ஆண்டுச் சராசரி | | புள்ளிக்குப் புள்ளி | |
| | | | | 2006 | 2007 | 2008(அ) | திசெ. 2006 | திசெ. 2007 | திசெ. 2008 (அ) | 2007/ 2006 | 2008/ 2007(அ) | திசெ. 2007/ திசெ. 2006 | திசெ. 2008/ திசெ. 2007(அ) |
| உள்நாட்டு | அரிசி - சம்பா | கி.கி | 2.8 | 41.15 | 50.98 | 76.53 | 45.40 | 63.71 | 78.64 | 23.9 | 50.1 | 40.3 | 23.4 |
| | அரிசி - பச்சை (சிவப்பு) | கி.கி | 0.9 | 31.19 | 44.56 | 64.65 | 38.27 | 55.32 | 66.38 | 42.9 | 45.1 | 44.6 | 20.0 |
| | அரிசி - பச்சை (வெள்ளை) | கி.கி | 0.6 | 27.37 | 38.78 | 60.66 | 32.01 | 51.68 | 62.63 | 41.7 | 56.4 | 61.4 | 21.2 |
| | அரிசி - நாடு | கி.கி | 0.5 | 31.48 | 44.45 | 65.29 | 38.01 | 56.99 | 68.43 | 41.2 | 46.9 | 49.5 | 20.1 |
| | தேங்காய் (நடுத்தரம்) | காய் | 5.4 | 15.65 | 21.83 | 28.88 | 18.62 | 27.83 | 24.87 | 39.5 | 32.3 | 49.4 | -10.6 |
| | மீன் - கெலவல்ல | கி.கி | 1.1 | 308.14 | 407.10 | 471.50 | 333.81 | 414.72 | 490.07 | 32.1 | 15.8 | 24.2 | 18.2 |
| | அவரை | கி.கி | 0.5 | 75.99 | 83.51 | 102.60 | 102.10 | 82.93 | 110.27 | 9.9 | 22.9 | -18.8 | 33.0 |
| | கத்தரி | கி.கி | 0.2 | 47.67 | 52.12 | 64.57 | 71.31 | 55.99 | 81.49 | 9.3 | 23.9 | -21.5 | 45.5 |
| | முட்டைகள் | ஒன்று | 0.4 | 7.06 | 9.31 | 10.16 | 9.09 | 11.64 | 11.55 | 31.8 | 9.1 | 28.1 | -0.8 |
| இறக்குமதிகள் | சீனி | கி.கி | 1.1 | 60.20 | 54.30 | 63.58 | 65.35 | 53.21 | 66.12 | -9.8 | 17.1 | -18.6 | 24.3 |
| | பால்மா - அங்கர் | 400கி | 3.8 | 160.55 | 189.32 | 274.63 | 165.83 | 268.82 | 267.32 | 17.9 | 45.1 | 62.1 | -0.6 |
| | சிவப்புப்பருப்பு | கி.கி | 0.8 | 75.49 | 103.80 | 189.11 | 81.94 | 117.64 | 205.31 | 37.5 | 82.2 | 43.6 | 74.5 |
| | கோதுமை மா | கி.கி | 0.2 | 34.22 | 55.36 | 73.86 | 40.47 | 66.12 | 71.81 | 61.8 | 33.4 | 63.4 | 8.6 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

134 இற்கு உச்சமடைந்து வரலாற்றில் உயர்ந்த மட்டங்களைப் பதிவு செய்தது. இவ்விலை அதிகரிப்புக்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் உள்ளூர் எரிபொருள் விலைகள் 2008 சனவரியிலிருந்து யூலை வரையான காலப்பகுதியில் நான்கு தடவைகள் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. இதன்படி, 2007 மேயில் நிலவிய விலைகளுடன் ஒப்பிடுகையில் 2008 மேயில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் உள்நாட்டு விலைகள் முறையே 48 சதவீதம், 94 சதவீதம் மற்றும் 57 சதவீதத்தால் உயர்த்தப்பட்டன. மசகெண்ணெய் விலைகள் பன்னாட்டுச் சந்தையில் வீழ்ச்சியடையத் தொடங்கியமையால் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் எரிபொருளின் உள்நாட்டு விலைகள் ஐந்து தடவைகள் கீழ் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டமையால் 2008 இறுதியில் டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் விலைகளில் முறையே 46 சதவீதம் மற்றும் 38 சதவீத வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டது. எனினும் 2008 திசெம்பர் இறுதியில் பெற்றோலின் தேறிய விலை 2007 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 3 சதவீதம் உயர்ந்து காணப்பட்டது. திரவப் பெற்றோலிய வாயுவின் இறக்குமதி விலை 2008இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 0.93 - 1.00 இற்கிடையே தளம்பலடைந்தது. இதனால், இவ்வாண்டில் திரவப் பெற்றோலிய வாயுவின் உள்நாட்டு விலைகள் 3 தடவைகள் அதிகரிக்கப்பட்டதுடன் 4 தடவைகள் வீழ்ச்சியடைந்தன. விலையின் தேறிய விளைவு யாதெனில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் திரவப் பெற்றோலிய வாயுவின் விலை 17.9 சதவீதத்தால் அதிகரித்தமையாகும். மேலும் வளமாக்கியின் இறக்குமதி விலை 2007இன் 40 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2008இல் 114 சதவீதத்தால் அதிகரித்தது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்புகள் இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் உயர் எரிபொருள் விலைகளுக்கு இணங்கிச் செல்லும் வகையில் அதிகரித்த சரக்குக் கட்டணங்களால் மேலும் செல்வாக்குச் செலுத்தப்பட்டன. 2008இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் உயர்ந்த ஏனைய பல முக்கிய இறக்குமதிகளின் விலைகளும் பன்னாட்டுச் சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சிகளுடன் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மெதுவடையத் தொடங்கின. இவ் அதிகரிப்புக்கள் மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக பிரதான உற்பத்தி செய்யும் நாடுகளில் வேளாண்மைப் பொருட்களின் வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறையாலும் சீனி, கோதுமைத் தானியம் மற்றும் சமையல் எண்ணெய் போன்ற வேளாண்மைப் பொருட்கள் நடைமுறையிலிருந்த உயர் பெற்றோலிய விலைகள் காரணமாக உயிரின எரிபொருளின் உற்பத்திக்கு திசை திருப்பப்பட்டமையாலும் உலக சந்தையில் உயர் உணவு விலைகளால் பெருமளவிற்கு உந்தப்பட்டன. கோதுமைத் தானியம், பால் மா, பருப்பு போன்ற உலக உணவுப் பொருட்களின் உயர்ந்து செல்லும் விலைகள் 2008 நடுப்பகுதி வரை பொது விலை மட்டம் மீது கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தின. எனினும், அரிசி மற்றும் பால் மா மீது உச்ச விலை மட்டங்களை விதித்தல், சமையல் எண்ணெய் மீதான இறக்குமதித் தீர்வையைக் குறைத்தல் போன்றவை அதிகரித்துச் செல்லும் உணவு விலைகளைக் குறைப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள், விலை மட்டங்களை ஓரளவுக்கு உறுதியாக வைத்திருப்பதற்கு பயனுறுதி வாய்ந்ததாக இருந்தன. இதேவேளை, பல முக்கிய பொருளாதாரங்கள் உலகளாவிய மந்த நிலைக்கு நழுவிச் சென்றமையால் மசகெண்ணெய் உள்ளிட்ட அநேகமான பொருட்களுக்கான உலகளாவிய கேள்வியில் சுருக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக, இவ்வாண்டின் பிற்பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. இதற்கமைய, பால்

**அட்டவணை 4.3** **நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள் - 2007 மற்றும் 2008**

| விடயம் | அலகு | விலை (திசெ.) ரூ. | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | 2006 | 2007 | 2008 | 2007/2006 | 2008/2007 |
| சிகரட்கள் (கோல்ட்லீவ்) | 1 | 11.00 | 14.00 | 16.00 | 27.3 | 14.3 |
| சிகரட்கள் (பிறிஸ்டல்/விக்ரோய்) | 1 | 9.50 | 12.00 | 13.00 | 26.3 | 8.3 |
| தென்னஞ் சாராயம் | 750 மில்லி.லீற் | 410.00 | 525.00 | 550.00 | 28.0 | 4.8 |
| அதிவிசேட சாராயம் | 750 மில்லி.லீற | 360.00 | 450.00 | 500.00 | 25.0 | 11.1 |
| டீசல் | ஒரு லீற்றர். | 60.00 | 75.00 | 70.00 | 25.0 | -6.7 |
| மண்ணெண்ணெய் | ஒரு லீற்றர். | 48.00 | 68.00 | 50.00 | 41.7 | -26.5 |
| பெற்றோல் | ஒரு லீற்றர். | 92.00 | 117.00 | 120.00 | 27.2 | 2.6 |
| உலை எண்ணெய் (1000) | ஒரு லீற்றர். | 44.40 | 52.70 | 32.70 | 18.7 | -38.0 |
| உலை எண்ணெய் (1500) | ஒரு லீற்றர். | 43.30 | 51.70 | 31.70 | 19.4 | -38.7 |
| உலை எண்ணெய் (3500) | ஒரு லீற்றர். | 41.00 | 46.65 | 25.00 | 13.8 | -46.4 |
| மின்சாரம் - நிலையான கட்டணங்கள் தீர்வைத்தொகுதி | | | | | | |
| | முதல் 30 அலகுகள் | 60.00 | 60.00 | 60.00 | 0.0 | 0.0 |
| | 31 - 60 அலகுகள் | 90.00 | 90.00 | 90.00 | 0.0 | 0.0 |
| | 61 - 90 அலகுகள் | 120.00 | 120.00 | 120.00 | 0.0 | 0.0 |
| | 91 - 180 அலகுகள் | 180.00 | 180.00 | 180.00 | 0.0 | 0.0 |
| | 180 இற்கு மேற்பட்ட அலகுகள் | 240.00 | 240.00 | 240.00 | 0.0 | 0.0 |
| மின்சாரம் - அலகுக்கான கட்டணங்கள் தீர்வைத்தொகுதி | | | | | | |
| | முதல் 30 அலகுகள் | 3.00 | 3.00 | 3.00 | 0.0 | 0.0 |
| | 31 - 60 அலகுகள் | 4.70 | 4.70 | 4.70 | 0.0 | 0.0 |
| | 61 - 90 அலகுகள் | 5.10 | 7.50 | 7.50 | 47.1 | 0.0 |
| | 91 - 180 அலகுகள் | 12.10 | 14.00 | 16.00 | 15.7 | 14.3 |
| | 180 இற்கு மேற்பட்ட அலகுகள் | 17.30 | 19.80 | 25.00 | 14.5 | 26.3 |
| பேரூந்துக் கட்டணம் | - | - | - | - | 16.5 | 17.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 7

## உலக உணவு நெருக்கடி - காரணங்கள் மற்றும் இலங்கை மீதான தாக்கங்களும், மீட்சிக்கான முன்னெடுப்புக்களும்

2006ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பமான உலக உணவுப் பொருட்களின் விலையேற்றம், குறிப்பாக திட உணவுப் பொருட்களின் விலையேற்றம் 2007ஆம் ஆண்டிலும் துரிதமானதாகவும், 2008ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவிலும் அதிகரித்து கடுமையான தன்மையை ஏற்படுத்தி உலகளாவிய ரீதியில் மிக முக்கிய கரிசனைக்குரிய விடயமாக வியாபித்துள்ளது. 2006 - 2008 யூன் வரையான காலப்பகுதியில் உலகளவில் அரிசியின் விலை சராசரியாக 217 சதவீதத்தினாலும், மாவு 136 சதவீதத்தினாலும், கோதுமை 125 சதவீதத்தினாலும், சோயா அவரை 107 சதவீதத்தினாலும் அதிகரித்தமையானது மேற்குறித்த நெருக்கடியின் பாரதூரமான தன்மையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. மேலும், உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் கணிப்பிடப்படும் உலக உணவுச் சுட்டெண் (2002 - 2004=100) ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 44 சதவீதத்தினால் அதிகரித்து 214 புள்ளியென்ற உச்ச நிலையைத்தொட்டு நிற்கின்றது.

பெற்றோலிய பொருட்களின் திடீர் விலையேற்றத்துடன் இணைந்த உணவுப் பொருட்களின் விலையேற்றமானது, அபிவிருத்தியடைந்த மற்றும் அடைந்து வரும் நாடுகளில் வாழுகின்ற, தமது மொத்தச் செலவினத்தின் பெரும்பகுதியை உணவுக்காகச் செலவிடும் ஏழைக் குடிகளின் சமூக நிலைத்தன்மையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. உணவு நெருக்கடியின் பிரதிபலிப்பாக உணவுப்பொருள் விலைகளில் ஏற்பட்ட பணவீக்கத்தினுடைய உயர்ந்த சமூகச் செலவின் தாக்கத்தினையும் பெரும்பாலான நாடுகள் எதிர்கொண்டன. இதுவும் கூட மிகவும் வறிய மக்களையே மிகவும் பாதித்தது. பொதுவான ஒரு நோக்கில், இந்த நெருக்கடியானது பேரண்டப் பொருளியல் காரணிகளை ஆட்டம் காணச் செய்தது. இது, வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு, சென்மதி நிலுவை மற்றும் வெளிநாட்டு நாணய ஒதுக்குகள், செலாவணி வீதம், இறை நிலைமைகள் மற்றும் உணவு விலைகளினால் தூண்டப்பட்ட பணவீக்கம் என்பவற்றில் ஏற்பட்ட சமச்சீரின்மை மூலம் தெளிவாகப் புலப்பட்டது. 2008இன் நடுப்பகுதியிலிருந்து உலக உணவு விலைகள் வீழ்ச்சியைக் காட்டத் தொடங்கிய போதும் மொத்தத்தில், எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமைகளைத் திறம்பட எதிர்கொள்ளும் வகையில், குறிப்பாக வேளாண்மை சம்பந்தப்பட்ட கொள்கைகளையும், பொதுவான பொருளியல் கொள்கைகளையும் எதிர்காலத்தில் மீளமைக்க வேண்டிய மற்றும் மீள உருவாக்க வேண்டிய தேவை உலகளாவிய ரீதியில் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்பதுமே நிதர்சனம்.


### உலக உணவுப் பொருள் விலையேற்றத்திற்கான காரணங்கள்

உணவு தானியங்களின் உலகளவிலான விலை ஏற்றத்திற்கான முக்கியமான அடிப்படைக் காரணங்களை மீண்டெழும் மற்றும் நிலையான காரணிகள் என்ற வகையில் நோக்கலாம். மீண்டெழும் காரணிகளை குறுகிய கால அல்லது ஆண்டு அடிப்படையில் தீர்க்கக்கூடிய அதேவேளை, நிலையான காரணிகள், கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றிற்கிடையேயான பொருத்தமின்மையால் நடுத்தர காலப்பகுதியிலிருந்து நீண்ட காலப்பகுதி அடிப்படையில் உலகினை அச்சுறுத்துகின்றன.


பின்வரும் நிரற்படுத்தப்படுவன மீண்டெழும் காரணிகளுள் உள்ளடக்கலாம். (i) பெருவாரியான உற்பத்தி மேற்கொள்ளப்படும் நாடுகளில் அறுவடைக் காலத்தில் ஏற்படும் ஒழுங்கீனமான அல்லது பாதகமான காலநிலை, வெள்ளப்பெருக்கு, பீடைத்தாக்கங்கள் மற்றும் சில நாடுகளில் காணப்படும் கடும் குளிர் நிலைமை, (ii) 2008 நடுக்காலப்பகுதிக்கு முன்னதாக ஐக்கிய அமெரிக்காவில், ஈட்டுச்சந்தை குழப்பத்தினால் பொருட்சந்தையில் பாய்ச்சப்பட்ட நிதியின் மூலம் உருவாகிய ஊக அடிப்படையிலான கேள்வி (iii) முக்கிய நாணயங்களுக்கெதிரான ஐக்கிய அமெரிக்க டொலரில் ஏற்பட்ட வரம்பிற்கு மீறிய சரிவின் விளைவாக குறிப்பாக 2007இல் ஐக்கிய அமெரிக்க டொலர் அடிப்படையிலான பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, (iv) பல்வேறு நாடுகளில் முன்னெச்சரிக்கை நோக்கத்துடன் ஏற்பட்ட கேள்வி, (v) விலைக்கட்டுப்பாடு மற்றும் ஏற்றுமதித் தடை போன்ற கொள்கைகளின் விளைவுகள் - உள்நாட்டில் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் அரிசியை ஏற்றுமதி செய்யும் முதன்மை நாடுகள் மேற்படி கொள்கைகளை நடைமுறைப்படுத்தியமை காரணமாக பன்னாட்டு சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிலையற்ற தன்மை.

பின்வரும் நிரற்படுத்தப்படுவன நிலையான காரணிகளுள் உள்ளடக்கலாம். (i) பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்படுகின்ற துரித அதிகரிப்பு மற்றும், உயர்ந்த வலுச் செறிவுமிக்க வேளாண்மை முறையின் அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக வளமாக்கி மற்றும் எரிபொருள் வலு போன்ற உள்ளீடுகளின் விலைகள் உயர்வடைந்து, வேளாண்மை உற்பத்திகளின் செலவு உயர்வடைதல் (ii) மாற்றீட்டு எரிபொருள் (உயிரின - எரிபொருள்) உற்பத்திக்கான உணவு தானியங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டமை, (iii) கைத்தொழில்மயமாதல், நகரமயமாதல் மற்றும் அதிகரிக்கும் குடித்தொகை போன்றவை காரணமாக நிலங்களின் வர்த்தகரீதியிலான பாவனை அதிகரிப்பு, (iv) வாழ்வாதார, கைத்தொழில் மற்றும் வேளாண்மை நோக்கங்களுக்காக அதிகரிக்கும் அருமையான நீர்வளத்தின் போட்டி, (v) குறைவான உற்பத்தித்திறன் மற்றும் சமூக காலமாக ஏற்பட்ட தானிய உற்பத்தியின் தேங்கு நிலை, (vi) கொள்கைகளின் போதாததன்மை மற்றும் நலிவடைந்த நிறுவனங்கள் போன்றவை வேளாண்மைத்துறைக்கான ஊக்குவிப்புக்களை வலுவிழக்கச் செய்கின்றமை, (vii) அதிகரிக்கும் வருமானத்தினால் ஆசியாவில் ஏற்பட்டிருக்கும் கொள்வனவு சக்தி அதிகரிப்பானது, பெருமளவிலான உணவு நுகர்ச்சிக்கு வழிகோலியுள்ளது. மேலும் கடந்த சில தசாப்தங்களாக பாரம்பரிய திட உணவுகளுக்கான கேள்வி நகர்வடைந்து இறைச்சி மற்றும் பால் போன்ற உணவு வகைகளுக்காக கேள்வியைப் பெருமளவால் அதிகரித்தமையானது ஆண்டிற்கான உணவுக் கேள்வியை உயர்வடையச் செய்துள்ளது.

வரைபடம் சி.கு 7.1 நுகர்வுப் பண்டங்களின் மொத்த இறக்குமதியில் உணவு இறக்குமதிகளின் பங்கு




வரைபடம் சி.கு 7.2 கொ.நு.வி. சுட்டெண்ணின் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூர் உணவு பொருட்களின் செலவு வளர்ச்சி




## உலக உணவு விலையேற்றம் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

இலங்கையானது, தனக்குத் தேவையான சகல உணவு வகைகளையும் உற்பத்தி செய்யமுடியாதெனினும், குறிப்பிடத்தக்களவு சதவீதமான திட உணவுகளை உற்பத்தி செய்கின்றது. எனினும், தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் நாடு கணிசமான தொகையில் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதால், உலக உணவு விலையேற்றம் இலங்கையிலும் கூடப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது. பிரதான திட உணவான அரிசிக்கு மட்டுமில்லாது, இலங்கையானது கோதுமை, கோதுமை மாவு போன்ற பல முக்கிய உணவுப் பொருட்களுக்கும் அது போல பருப்பு, உளுந்து, பால் மா மற்றும் சீனி போன்ற இதர உணவு வகைகளுக்கும் இறக்குமதியிலேயே தங்கியுள்ளது. இலங்கையின் மொத்த நுகர்வுப் பொருள் இறக்குமதியில் உணவுப் பொருட்களின் சதவீதமானது 2006, 2007 மற்றும் 2008இல் முறையே 43, 47 மற்றும் 53 சதவீதமாக இருந்தது. இந்த நிலைமையானது, குறிப்பாக 2007 இலும் 2008இன் முதல் அரைப்பகுதியிலும் முன்னெப்பொழுதுமில்லாத உணவு இறக்குமதிச் செலவின அதிகரிப்பினை ஏற்படுத்தியது.


அபிவிருத்தியடைந்து வரும் இதர நாடுகளைப் போலவே இலங்கையிலும் நுகர்வோரின் மொத்தச் செலவில் உணவு பெரும் பங்கைப் பெறுகிறது. தற்போதைய, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் நுகர்வோர் கூடையில் 48 சதவீதமான நிறையை உணவுப் பொருட்களே வகிக்கின்றன. இதனால் உணவு விலைகளில் ஏற்படும் எந்தவொரு அதிகரிப்பும் நேரடியாக முதன்மைப் பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்யும் அதேவேளை, நேரடி விலை அதிகரிப்பை ஈடுசெய்வதற்காக கூலி போன்ற உணவல்லாத பொருட்களின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பானது மறைமுகமாகப் பணவீக்கத்தினை ஏற்படுத்தும். இப் பின்னணியில், இறக்குமதிப் பொருட்களின் உயர் விலைகள் இலங்கையின் உள்நாட்டு விலைகளை பேரலையாகத் தாங்கி உயர்வடைச் செய்வதன் மூலம் வாழ்க்கைச் செலவையும் அதிகரிக்கச் செய்கின்றன. இதன் விளைவாக, இறக்குமதி உணவுப் பொருட்களின் உயர் விலைகள் பணவீக்கத்திற்கான முக்கிய காரணியாக இருந்ததுடன், இது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2008ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 28.2 சதவீதத்தாலும், 2006 இறுதியில் 13.5 சதவீதத்தாலும் 2007 இறுதியில் 18.8 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும், உயர் உணவு விலைகளால் உருவாகிய உயர் பணவீக்கம், குறிப்பாக நகர மற்றும் பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த ஏழைகளின் கொள்வனவு சக்தியைக் குறைத்து சராசரி நுகர்வோருக்கு அழுத்தத்தினைக் கொடுத்த போதிலும், வேளாண்மையினை ஜீவனோபாயமாகக் கொண்ட கிராமிய ஏழை வேளாண்மையாளர்களின் வருமானத்தை அதிகரிக்கப் பங்களித்தது.

## பாதகமான தாக்கங்களைக் கையாளுதல்

பன்னாட்டு ரீதியாக, மிகவும் வறிய மக்கள் சமூகத்தைக் கொண்ட, குறைந்த வருமானத்தையுடைய அரசாங்கங்கள் அதிகரிக்கும். உணவு விலையின் தாக்கங்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கைகளும், பரிகாரங்களும் சம்பள அதிகரிப்பு, வரிகள், தீர்வைகளின் குறைப்பு, உதவுதொகை வழங்கல், மாற்றல்களின் நீடிப்பு, ஏற்றுமதித் தடைகள், இறக்குமதி மற்றும் விலைக் கட்டுப்பாடு போன்றவற்றின் பிறவடிவங்களில் காணப்பட்டன.

இலங்கையில், அரசாங்கமானது பல்வேறு வழிமுறைகளில் உயர் உணவு விலைகளைக் கையாண்டது. கோதுமை மா, பால் மா போன்ற சில உணவுப்பொருட்களின் விலைகள் பன்னாட்டு விலைகளுக்கேற்ப சரி செய்யப்பட்டன. இவ்வகையில் பன்னாட்டு விலைகளின் அழுத்தங்கள் நுகர்வோரை

வரைபடம் சி.கு 7.3 கொ.நு.வி. சுட்டெண்ணின் (பு) நிறைகளின் பகிர்ந்தளிப்பு



முழுமையாகத் தாங்கும் வேளையில் உருளைக்கிழங்கு, பருப்பு, பெரிய வெங்காயம் போன்ற பொருட்கள் மீது தீர்வைகளும் விதிக்கப்பட்டு நுகர்வோருக்கான உதவிகள் குறைக்கப்பட்டன. மேலும், மனித வாழ்வோடு பெரிதும் தொடர்புடைய பதினொரு முக்கியமான உணவுப் பொருட்களின் இறக்குமதி மீதான தீர்வைகளும், வரிகளும் நீக்கப்பட்டு பதிலாக ஒற்றைக் கலவைத் தீர்வை 2008 சனவரி முதல் அரசால் அறிமுகம் செய்யப்பட்டது. இலங்கையின் மொத்தக் கோதுமை மா நுகர்வும் இறக்குமதியில் தங்கியிருக்கும் நிலையில், கோதுமை மாவின் விலையேற்றம், அரிசியின் விலையேற்றத்திலும் துரிதமானதாக இக் காலப்பகுதியில் காணப்பட்டது. அரிசி விலை அதிகரித்ததெனினும், இலங்கையானது தனது அரிசித் தேவையின் ஒரு பகுதியை தானே உற்பத்தி செய்து கொள்வதானல் அரிசி விலையிலேற்பட்ட அதிகரிப்பு சர்வதேசரீதியிலான அதிகரிப்பிலும் குறைவானதாகவே காணப்பட்டது. உள்நாட்டுச் சந்தையிலிருந்த விலைகளின் துரித அதிகரிப்பைப் பொறுத்த வரையில், 2008 ஏப்பிறலில் பல்வேறு வகையான அரிசிகளுக்கான அதிகபட்ச சில்லறை விலைகளைத் தீர்மானித்ததுடன், 2008 ஓகத்தில் அரிசி இறக்குமதிக்கான சுங்கத் தீர்வையையும் நீக்கியது. இதற்கும் மேலதிகமாக, பன்னாட்டு ரீதியிலான உயர்ந்த வளமாக்கி விலைக்குமிடையில், நெல்லுற்பத்தியாளர்களுக்கு தூண்டல் உதவி அடிப்படையில் வளமாக்கி வழங்கலை அரசாங்கம் தொடர்ந்தது. 2007இல் 11,000 மில்லியன் ரூபாய்களாக இருந்த வளமாக்கி உதவுதொகை திட்டச் செலவு 2008இல் 26,000 மில்லியன் ரூபாய்களாக அதிகரித்தது. உள்நாட்டு வேளாண்மையை முன்னேற்றும் நோக்கம் கருதி 2009 அரச வரவு செலவுத்திட்டத்தில் கொள்கைத் தூண்டல் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய தானியங்கள், பழங்கள் என்பவற்றின் இறக்குமதி மீது புதிய செஸ் வரி வீதங்களை விதிக்கும் திட்டங்களையும் உள்ளடக்கியிருந்தது. இதற்கிடையில், கடுமையான உணவு நெருக்கடியின் பின்னணியில், "நாங்கள் வளர்வோம் - நாங்கள் அபிவிருத்தியடைவோம்" என்ற அரசாங்கத்தின் தேசிய நிகழ்ச்சித்திட்டம் உள்நாட்டு வேளாண்மையின் வளர்ச்சிக்கு வலுவூட்டியது. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம், இலங்கையானது உள்நாட்டு உணவு வழங்கலில் கடுமையான தடைகளின்றி, உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையிலுள்ளது.

எனினும், விலைக்கட்டுப்பாடுகள் நுகர்வோருக்கு ஓர் தற்காலிக ஆறுதலைத்தரும் செயற்பாடாகும். ஒரு தடவை, அறிமுகப்படுத்தப்பட்ட விலைக் கட்டுப்பாடானது ஓர் நிரந்தர கருவியாக காணப்படுவது ஆபத்தானதாகும். கணிசமான உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கள் காணப்படாததனால் உற்பத்திச் செலவுகள் தொடர்ந்து அதிகரிக்கின்றமை விவசாயிகளின் இலபாத்தை குறைக்கின்றது. இது அவர்களை உள்ளீட்டுத் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களாக்குகின்றது. ஆகவே, அரசு தற்போதைய விலைக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்து நிலைத்து நிற்கக்கூடிய ஓர் வேளாண்மைத் துறையை அபிவிருத்தி செய்வது மிக முக்கியமானதாகும்.

### எதிர்காலத்திற்கான தயார்படுத்தல்கள்

பன்னாட்டு ரீதியாக தற்போது பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள குறைவுப் போக்கானது, பல நாடுகளுக்கு நிம்மதியாக மூச்சு விட இடமளித்திருப்பினும், இதே மாதிரியான உணவு நெருக்கடி வருங்காலத்தில் ஏற்படாது என முழுமையாகக் நிராகரிக்க முடியாது. இதனால், எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை வெற்றிகரமாகக் கையாளக்கூடிய, பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இதனைப் பொறுத்தவரை, அரசாங்கம் வேளாண்மைத்துறையில் உற்பத்தி மற்றும் உற்பத்தியாக்கம் என்பனவற்றை உயர்த்துவதற்கும் நவீனத்துவ முறைகளை பின்பற்றுவதனை தூண்டுவதற்குமான நிறுவனரீதியான உதவிகளை வழங்க முடியும். மேலும் சந்தைப்படுத்தல் மற்றும் அதனுடன் தொடர்பான உட்கட்டமைப்பிற்கு வசதியளிக்கும் முயற்சிகளும் சம அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். இப் பின்னணியில், 100,000 மெற்றிக் தொன் அரிசியை ஆண்டுதோறும் தாங்கிருப்பாக பேணும் பொருட்டு உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு வலுவூட்டுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு பற்றிய அதன் கொள்கையை அரசாங்கம் மீள மாற்றியமைத்தது. தாங்கிருப்பினைப் பேணுவது எதிர்கால உணவு வழங்கல் தடையின்றி நடைபெறுவதனை உறுதிப்படுத்துகின்ற வேளையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மீது தங்கியிருப்பதனையும் குறைக்கிறது. இக் கொள்கையானது மிகையான உணவு நிரம்பல் காணப்படும் சந்தர்ப்பத்திலும் வேளாண்மையாளர்களிடமிருந்து போட்டி விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்வதனை இயலச் செய்தது.

அதேவேளை விடுவிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் வளமான வேளாண்மை நிலங்கள், விலங்கு வளர்ப்பு, வேளாண்மை மற்றும் மீன்பிடியை தூண்டுகின்ற சூழல் தன்மை ஆகிய வளம் நிறைந்த வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட செல்வமிக்க மாகாணங்களாக இவ்விரண்டும் விளங்குவதனால் நாட்டின் வேளாண்மைத்துறையின் வளர்ச்சிக்கு இவை தூண்டுதலை வழங்கும். இவ்வுத்வேகத்திற்கு அரசாங்கம், வேளாண்மைக்கு தூண்டுதல் அளிக்கும் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்ட அதன் காத்திரமான முயற்சிகளுக்குப் புறம்பாக, இப் பகுதிகளிலுள்ள உற்பத்தியாளர்களுக்கு பிரபல்யமான சிறந்த வேளாண்மை நடைமுறைகளையும் அத்துடன் கொடுகடன் வசதிகளையும் வழங்குவதன் மூலம் மேலும் உதவிகளை வழங்க முடியும். உண்மையில் அரசாங்கத்தின் பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு: 2006 - 2016, நடுத்தர காலத்தில் வேளாண்மைத்துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பல்வேறு துறைகளையும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. இலங்கை பாரிய கிராமங்களைத் தளமாகக் கொண்டதொரு வேளாண்மை சமூகத்தினைக் கொண்டிருப்பதனாலும் உணவு உற்பத்திப் பெருக்கத்தினை மேற்கொள்ள வலுவுடையதாக இருக்கின்றமையை உலக உணவு நெருக்கடிக்கெதிரான தந்திரோபாயமாக வரிந்து கொள்ளலாம். அதிகளவிலான உணவிற்கான செலவை ஈடுகட்டக் கூடிய வகையில் மக்களின் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதே உணவு நெருக்கடியை எதிர்கொள்வதற்கான மிகவும் பொருத்தப்பாடுடைய வழியாகும் என்பதே நிதர்சனம்.

மா, சீனி, மைசூர் பருப்பு போன்றவற்றின் பன்னாட்டு விலைகள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. 2008இல் பணவீக்கம் முக்கியமாக உலகளாவிய பொருள் விலை அதிகரிப்பினால் தோற்றுவிக்கப்பட்டதால் இவ்வாண்டின் பிற்பகுதியில் குறைவடைந்து செல்லும் உலகளாவிய விலைகளும் பணவீக்கம் கீழ் நோக்கி நகர்வதற்கு வழியமைத்தது.

**2008இல் நிருவகிக்கப்பட்ட விலைகள் பல தடவைகள் திருத்தியமைக்கப்பட்டன.** இவ்விலைத் திருத்தங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இரண்டினதும் விலைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்தது. மண்ணெண்ணெய், டீசல் மற்றும் பெற்றோல் விலைகளின் மாற்றங்கள் நிருவாக ரீதியில் மேற்கொள்ளப்பட்டன. இவ் எரிபொருள் விலைத் திருத்தங்களுடன் இணங்கிச் செல்லும் வகையில் 2008இல் அரச மற்றும் தனியார்துறை இரண்டினதும் பேரூந்துக் கட்டணங்களும் 2008இல் திருத்தி அமைக்கப்பட்டன. அத்தகைய மாற்றங்களின் தேறிய விளைவாக இவ்வாண்டில் பேரூந்துக் கட்டணங்களில் 17.6 சதவீத சராசரி அதிகரிப்பை விளைவித்தது. இதேவேளை, மூன்று ஆண்டுகளில் முதற் தடவையாக புகைவண்டிக் கட்டணங்கள் 2008 யூனில் 79 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தால் அதிகரிக்கப்பட்டன. எனினும், டீசல் விலைகளிலான குறைப்பைத் தொடர்ந்து புகைவண்டிக் கட்டணங்கள் 74 சதவீதத்தால் குறைவடைந்தது. வீட்டுப்பாவனை மற்றும் கைத்தொழில் நோக்கங்கள் இரண்டுக்குமான மின் கட்டணங்கள் 2008இல் அதிகரிக்கப்பட்டமை பொருட்கள் மற்றும் பணிகளின் உற்பத்திச் செலவை அதிகரித்து விலை மட்டங்களை அதிகரித்தது. நிருவகிக்கப்பட்ட விலைத் திருத்தங்கள் அதிகரித்த உள்ளீட்டுச் செலவுகளூடாக கசிந்து பரவும் தாக்கத்தைக் கொண்டிருந்த போதிலும் அவ்விலைகளில் உள்ளடக்கியிருந்த உதவுதொகைக் கூறுகளின் குறைப்பு நீண்ட காலத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான கேள்வி முகாமைத்துவ வழிமுறையாகும்.

**2008 இறுதியில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் செலாவணி வீதம் 3.9 சதவீதத்தால் சிறிதளவில் பெறுமதியில் தேய்வடைந்த போதிலும் இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா உறுதியாக இருந்தமையால் செலாவணி வீத மாறுபாடு காரணமாக பணவீக்கம் மீது ஏற்பட்ட மொத்த விளைவு, 2008இல் மிகச் சிறிதாகவே காணப்பட்டது.** உயர்ந்து காணப்பட்ட பன்னாட்டு விலைகள் மற்றும் இலங்கை ரூபாவின் சிறிய அளவிலான பெறுமானத் தேய்வு என்பன காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்களைத் தணிக்கும் வழிமுறையொன்றாக அத்தகைய விடயங்கள் மீதான பல வகை வரிகள் துறைமுக மற்றும் விமான நிலையத் தீர்வை, சுங்கத் தீர்வை மற்றும் மிகைக் கடடணங்கள், பெறுமதிசேர் வரி, சமூக பொறுப்பாண்மைத் தீர்வை மற்றும் ஏனைய கட்டணங்களை ஒருங்கிணைத்ததன் மூலம் மீள அமைக்கப்பட்டு விசேட பண்டத் தீர்வை என அழைக்கப்பட்ட ஒரு வரியின் கீழ் கொண்டு வந்ததன் மூலம் விலைகள் மீதான பெருமளவு வரித் தாக்கங்கள் தவிர்க்கப்படுகிறது.

### நுகர்வோர் விலைகளின் அசைவுகள்

**நாட்டின் அலுவல்சார் நுகர்வோர் விலைச் சுட்டெண்ணான கொ.நு.வி.சுட்டெண்ணினால் நுகர்வோர் விலைகளின் அசைவுகள் அளவிடப்படுகின்றன. கொ.நு.வி.சுட்டெண் 2008 சனவரியின் 183.5 இலிருந்து 2008 திசெம்பரில் 203.7 இற்கு 20 சுட்டெண் புள்ளிகளால் உயர்ந்தது. இதன்படி, சுட்டெண் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 14.4 சதவீத அதிகரிப்பை அடைந்து 2007 உடன் ஒப்பிடுகையில் 22.6 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது.** எனினும், சுட்டெண் இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் மேல் நோக்கி அசைந்து 2008 சனவரியில் 20.8 சதவீதத்திலிருந்து ஆரம்பித்து 2008 யூனில் 28.2 சதவீத உச்ச அளவை அடைந்து அதன்பின் 2008 திசெம்பரில் 14.4 சதவீதத்திற்குப் படிப்படியாக மெதுவடைந்தது.

**கடந்த 12 மாதக் காலப்பகுதியில் சுட்டெண்ணில் கட்டியெழுப்பப்பட்ட விலை அழுத்தத்தின் விளைவாக ஆண்டுச் சராசரி பணவீக்க வீதம் 2008 சனவரியின் 16.4 சதவீதத்திலிருந்து ஒத்தோபரில் 23.4 சதவீதத்திற்கு உயர்ந்தது.** அதன்பின் இது 2007 திசெம்பரில் நிலவிய 15.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008 திசெம்பரில் 22.6 சதவீதத்தை அடைந்தது.

**இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இரண்டினதும் விலையில் அதிகரிப்புக்கள் காணப்பட்டன.** பணவீக்கம் மீதான அளவுக்கதிகமான செல்வாக்கு 2008இல் மொத்த மாதாந்த நுகர்வுச் செலவினத்தின் 71 சதவீதமளவிற்கு வகைகூறும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. இதேவேளை, ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கத்திற்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான பங்களிப்பு 2008 சனவரியின் 60.3 சதவீதத்திலிருந்து 2008 திசெம்பரில் 67.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**2008 இல் பொதுவான விலை அதிகரிப்பிற்கான முக்கிய பங்களிப்பு கொநுவிசு இல் 46.7 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய நிறையைக் கொண்டுள்ள உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகள் துணைச் சுட்டெண்ணிலிருந்து ஏற்பட்டது.** உணவுத் துணைச் சுட்டெண்ணிலான புள்ளிக்குப் புள்ளி மாற்றம் இவ்வாண்டில் ஆரம்பத்திலிருந்த 30.0 சதவீதத்திலிருந்து 2008 மேயில் 42.8 சதவீதம் கொண்ட உச்ச அளவை அடைந்த போதிலும் இதற்குப் பின்பு கூர்மையான வீழ்ச்சியைப் பதிவு செய்து 2008 திசெம்பரில் 15.1 சதவீதத்தை அடைந்தது. முழு மொத்தச் சுட்டெண்ணில் உணவுத் துணைச் சுட்டெண்ணின் முக்கியத்துவத்தினால் முழு மொத்த பணவீக்கமானது அதனுடன் இணைந்து அசைவுற்றது. துணைச் சுட்டெண் இவ்வாண்டின் கொநுவிசு இன் ஆண்டுக்கு ஆண்டு மாற்றங்களுக்கு சராசரியாக 62.7 சதவீதத்தை இவ்வாண்டில் பங்களிப்புச் செய்தது. உணவுத் துணைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 2008இல் 30.5 சதவீதமாக விளங்கியது. அரிசி, கோதுமை மா, பாண், வெளியிலிருந்து வாங்கப்பட்ட உணவுகள், பால் மா, தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பவற்றின் விலை அதிகரிப்புக்கள் கொ.நு.வி.சுட்டெண் மீது பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்திய முக்கிய பொருட்களாகும். 2008இல் திரவப் பெற்றோலிய வாயுவின் விலை கிட்டத்தட்ட

17.9 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டமையும் 6.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க நிறையைக் கொண்டுள்ள வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உணவுகளின் அதிகரித்த விலைகள் ஊடாக உணவுத் துணைச் சுட்டெண் மீது இரண்டாம் சுற்று விளைவையும் கொண்டிருந்தது.

**2008இன் முழு மொத்த அதிகரிப்பிற்கு முறையே 16.3 சதவீதம், 5.6 சதவீதம் மற்றும் 10.1 சதவீத பங்களிப்புக்களை போக்குவரத்து, நலம் மற்றும் வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்களின் துணைச் சுட்டெண்கள் வழங்கின.** எரிபொருள் விலை அதிகரிப்புக்கள் குறிப்பாக 2008 யூன் மாதத்துடன் முடிவடைந்த காலப்பகுதியில் போக்குவரத்து துணைச் சுட்டெண்ணின் கணிசமான அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. நலத் துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்பு பெரும்பாலும் தனியார் மருத்துவமனைக் கட்டணங்கள், மருந்துகள், சிறப்பு வைத்தியர்களுக்கான ஆலோசனைக் கட்டணங்கள், மருத்துவ கூட பரிசோதனைகள் போன்ற கொடுப்பனவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளால் ஏற்பட்டதாகும். குறிப்பாக இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட வாயு விலைகள் உள்ளிட்ட பல நிருவாக விலைத் திருத்தங்கள் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள் துணைச் சுட்டெண்ணிலான அதிகரிப்புக்குச் செல்வாக்குச் செலுத்தின. 16.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்த தொடர்பூட்டல் துணைச் சுட்டெண்ணைத் தவிர ஏனைய சகல துணைச் சுட்டெண்களும் 2008இல் 5.4 சதவீதத்திலிருந்து 14.6 சதவீதம் வரையிலான ஆண்டுச் சராசரி அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும், சுட்டெண்ணின் பொதுவான அதிகரிப்புக்கு அவற்றின் தனித்தனியான பங்களிப்புக்கள் சார்புரீதியில் குறைவாக இருப்பதால் ஏறத்தாழ அவற்றுக்கான நிறைகள் 7.8 சதவீதத்தை விடக் குறைவாக இருந்தன.

### மொத்த விற்பனை விலைகளின் அசைவுகள்

**மொத்த விற்பனை விலைகளின் அசைவுகள் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணினால் அளவிடப்படுகின்றன.** மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணானது நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் அது போன்று இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதிக்காகவும் உள்நாட்டுப் பயன்பாட்டுக்காகவும் உற்பத்தி செய்யப்பட்ட பல்வகைப் பொருட்களின் விலைகளின் மொத்த அசைவுகளை உற்பத்தியாளர் மட்டத்தில் அளவிடுகிறது. மொத்த விற்பனை விலைச்சுட்டெண் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து விரைந்த பாதையில் சென்று 2008 மேயில் 42.1 சதவீத உச்சமட்டத்தினை பதிவு செய்ததுடன் 2008 திசெம்பரில் 0.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி மாற்றம் 2007 திசெம்பரின் 24.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008 திசெம்பரில் 24.9 சதவீதமாக விளங்கியது. 2008இன் தொடக்கப் பகுதியில் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பிற்கு பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெய் மற்றும் உணவு என்பனவற்றின் அதிகரித்த விலைகளே முக்கிய காரணமாகும்.

**கிட்டத்தட்ட 68 சதவீத நிறையைக் கொண்டுள்ள உணவு வகை 2008இல் மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணின் மாற்றத்துக்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக அறிவிக்கப்பட்டுள்ளது.** சராசரியாக, உணவுத் துணைச் சுட்டெண் இவ்வாண்டின் பொதுவான அதிகரிப்பிற்கு கிட்டத்தட்ட 67 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. இது, குறிப்பாக இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவு விலைகளின் கூர்மையான அதிகரிப்புக்களால் பெரும்பாலும் ஏற்பட்டது. உணவுத் துணைச் சுட்டெண்ணில் மொத்த அதிகரிப்பைக் கருத்திற் கொள்கையில் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருட்கள் (உதாரணம் தேயிலை மற்றும் தெங்கு, தேங்காய் எண்ணெய் போன்றவை) 45 சதவீதமளவிற்குப் பங்களிப்புச் செய்திருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கிட்டத்தட்ட 21 சதவீதத்தைச் சேர்த்தன. இரண்டாவது ஆகக்கூடிய நிறையைக் கொண்ட பெற்றோலிய துணைச் சுட்டெண்ணில் 31.5 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பு இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் உள்நாட்டு எரிபொருள் விலைகளின் மேல் நோக்கிய திருத்தத்தின் விளைவாக ஏற்பட்ட போதிலும் இது இவ்வாண்டின் பிற்பகுதியில் கணிசமானளவில் குறைக்கப்பட்டது. இத் துறையிலிருந்து பொது அதிகரிப்புக்கான பங்களிப்பு கிட்டத்தட்ட 16 சதவீதமாக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2 சதவீதம் புள்ளிகள் கூடியதாகும். இரசாயனப் பொருட்கள் துணை வகை 45.7 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில் முக்கியமாக பன்னாட்டுச் சந்தையில் மூலப் பொருட்கள் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள், உலோகப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக போக்குவரத்து மற்றும் உலோக உற்பத்திகள் துணை தொகுதி விலைகள் முறையே 24.9 சதவீதத்தாலும் 25.6 சதவீதத்தாலும் அதிகரித்தன. 2008 ஒத்தோபரில் முக்கியமாக வெறியக் குடிவகைகள் மற்றும் பியர் மீதான கலால் தீர்வையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக வெறியக் குடிவகைகள் துணைத் துறையும் 18.9 சதவீதம் கொண்ட சராசரி அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

**பொருட்களின் மூலத்தின் அடிப்படையில் சுட்டெண்ணின் பொது அதிகரிப்புக்கு ஏற்றுமதித் துணைத்துறையின் பங்களிப்பு முன்னைய ஆண்டின் 51 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 32 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இது, உலகளாவிய பொருளாதார மெதுவடைவிலிருந்து இவ்வாண்டில் இரண்டாம் அரைப்பகுதியில் இறப்பருக்கும் இவ்வாண்டின் நான்காம் காலாண்டில் தேயிலைக்கும் தோன்றிய குறைந்த கேள்வியால் உந்தப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளிலேற்பட்ட வீழ்ச்சியால் பெரும்பாலும் ஏற்பட்டது. ஏற்றுமதித் துறைக்கான இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் உறுதியான வீதத்தில் அதிகரித்து 2007இன் 36.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 20.9 சதவீத ஆண்டுச் சராசரி அதிகரிப்பைப் பதிவு செய்தது. இறக்குமதிகள் துணைத்துறை முக்கியமாக பெற்றோலியம், கோதுமைத் தானியம், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்புக்களால் கிட்டத்தட்ட 34.5 சதவீதத்தால் அதிகரித்தது. இத்துறை கடந்த ஆண்டின் 26 சதவீதம் பங்களிப்புடன் ஒப்பிடுகையில் பொது

**அட்டவணை 4.4 துறைரீதியான சுருக்கிகளும் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியும்**

| துறை | சுட்டெண் 2006 | சுட்டெண் 2007 (அ) | சுட்டெண் 2008(ஆ) | சதவீத மாற்றம் 2007/2006 (அ) | சதவீத மாற்றம் 2008/2007(ஆ) |
|---|---|---|---|---|---|
| வேளாண்மை | 214.8 | 260.7 | 342.1 | 21.4 | 31.2 |
| கைத்தொழில் | 240.8 | 266.1 | 304.0 | 10.5 | 14.2 |
| பணிகள் | 217.9 | 249.3 | 285.1 | 14.4 | 14.4 |
| மொ.உ.உ | 224.9 | 256.4 | 298.3 | 14.0 | 16.3 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அதிகரிப்புக்கு கிட்டத்தட்ட 35 சதவீதத்துக்கு வகை கூறியது. உள்நாட்டுத்துறை முன்னைய ஆண்டின் 23 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் பொது அதிகரிப்புக்கு கிட்டத்தட்ட 33 சதவீதத்திற்கு வகை கூறியது. உள்நாட்டுத்துறை துணைச் சுட்டெண் நெல், மீன் மற்றும் மரக்கறிகள், டயர்கள், ஊர்திகளின் மின்கலங்கள், நீர்ப்பம்பிகள், தையல் இயந்திரங்கள், சீமெந்து மற்றும் வெறியக்குடிவகை போன்ற பொருட்களின் விலை அதிகரிப்புக்களால் செல்வாக்குச் செலுத்தப்பட்டு சராசரியாக 22.4 சதவீதத்தால் அதிகரித்தது.

**முடிவுப் பயன்பாட்டு பகுப்பின்படி, முன்னைய ஆண்டின் 75 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அதன் செல்வாக்கு குறைந்த போதிலும் 2008இற்கான மொத்த அதிகரிப்பில் 71 சதவீதத்திற்கும் கூடுதலான பெருமளவு செல்வாக்கை நுகர்வுப் பொருட்கள் கொண்டிருந்தன.** முக்கியமாக உணவுப் பொருட்களை உள்ளடக்கியுள்ள இத் துணைச்சுட்டெண், உணவுத் துணைச் சுட்டெண் போன்ற நடத்தையைக் கொண்டிருந்ததுடன் 26.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. கோதுமைத் தானியம், மண்வெட்டிகள் மற்றும் வளமாக்கியிலான விலை அதிகரிப்புக்கள் காரணமாக இடைநிலைத் துணைத்தொகுதி முன்னைய ஆண்டில் நிலவிய 20 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 25.1 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, மூன்று தொகுதிகளிடையே ஆகக் குறைந்த பங்கைக் கொண்டுள்ள முதலீட்டுப் பொருட்கள் துணைத்தொகுதிச்சுட்டெண் மீது சிறிதளவு விளைவைக் கொண்டிருந்ததுடன் 2007இன் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 7.0 சதவீதத்தால் அதிகரித்தது. நீர்ப்பம்பிகள், சீமெந்து, செங்கற்கள், கல்நார்த் தகடுகள், சுவர் தீந்தைகள், எஸ்லோன் குழாய்கள் மற்றும் உருக்கு கம்பி போன்ற கட்டடவாக்கப் பொருட்களின் விலைகளிலான வளர்ச்சி இவ்வபிவிருத்திக்குக் கூடுதலாகப் பங்களிப்புச் செய்தது. மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் மற்றும் அதிகரித்த உற்பத்திச் செலவு இப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் தொடர்பாக பெருமளவில் பங்களிப்புச் செய்தன.

### மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி (மொ.உ.உ.சு)

**மொ.உ.உ. சுருக்கியினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் முழுமொத்த விலை மாற்றம் 2007 இல் பதிவு செய்யப்பட்ட 14.0 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 2008இல் 16.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** கடந்த ஆண்டின் நடத்தையை ஒத்ததாக, வேளாண்மைத்துறை 2007இல் 21.4 சதவீதத்திற்கெதிராக ஒப்பீட்டளவில் ஒரு உயர்ந்த வீதமான 31.2 சதவீதத்தினைப் பதிவு செய்தது. பணிகள் துறையின் பணவீக்கம் 2007 இல் இருந்ததனைப் போன்று 14.4 சதவீதத்தில் மாற்றமின்றி தொடர்ந்துமிருந்தது. இவ்வாண்டில் பணவீக்கத்தின் தாழ்ந்த வீதமான 14.2 சதவீதம் கைத்தொழில்துறையில் காணப்பட்டதெனினும் இது 2007இன் 10.5 சதவீதத்திலிருந்து ஒரு அதிகரிப்பாகும். கைத்தொழில்துறையின் பணவீக்கத்தின் அதிகரிப்பு முக்கியமாக சுரங்கமகழ்தலும் கல்லுடைப்பும் மற்றும் தயாரிப்புத்துறைகளில் கடந்த ஆண்டிற்கு மேலாக கணிசமானளவு விலை அதிகரிப்பினால் பெறப்பட்டதாகும்.

## 4.3 கூலிகள்

**இலங்கையில் கூலிகள், அரசதுறை மற்றும் தனியார்துறை என்ற இரு முக்கிய தொழில்நிலை வகைகளின் கீழ் அடங்குகின்றன.** அரசதுறை, அரசு (மத்திய மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றம் ஆகிய துறைகள்) மற்றும் அரசுசார்

**அட்டவணை 4.5 கூலிவீதச் சுட்டெண்கள்**

(திசெம்பர் 1978=100)

| தொழில்நிலை வகை | சுட்டெண் பெயரளவு 2006 | சுட்டெண் பெயரளவு 2007 | சுட்டெண் பெயரளவு 2008(ஆ) | சுட்டெண் உண்மையான (அ) 2006 | சுட்டெண் உண்மையான (அ) 2007 | சுட்டெண் உண்மையான (அ) 2008(ஆ) | சதவீத மாற்றம் பெயரளவு 2006 | சதவீத மாற்றம் பெயரளவு 2007 | சதவீத மாற்றம் பெயரளவு 2008(ஆ) | சதவீத மாற்றம் உண்மையான (அ) 2006 | சதவீத மாற்றம் உண்மையான (அ) 2007 | சதவீத மாற்றம் உண்மையான (அ) 2008(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1. அரச ஊழியர்கள்** | | | | | | | | | | | | |
| மத்திய அரச ஊழியர்கள் | **3,150.8** | **3,828.4** | **4,116.1** | **163.5** | **171.6** | **150.4** | **30.3** | **21.5** | **7.5** | **18.5** | **5.0** | **-12.4** |
| நிறைவேற்றுத்தரமல்லா | 2,853.8 | 3,493.4 | 3,749.5 | 148.1 | 156.6 | 137.0 | 31.0 | 22.4 | 7.3 | 19.1 | 5.7 | -12.5 |
| சிற்றூழியர்கள் | 3,463.0 | 4,172.7 | 4,494.7 | 179.7 | 187.1 | 164.2 | 29.6 | 20.5 | 7.7 | 17.8 | 4.1 | -12.2 |
| அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 2,304.2 | 2,740.0 | 2,938.6 | 119.6 | 122.8 | 107.4 | 26.7 | 18.9 | 7.2 | 15.2 | 2.7 | -12.5 |
| **2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | | | | | | | |
| அனைத்து வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | **1,358.2** | **1,648.8** | **2,070.4** | **70.5** | **73.6** | **75.5** | **2.1** | **21.4** | **25.6** | **-7.1** | **4.4** | **2.6** |
| வேளாண்மைத் தொழிலாளர்கள் | 1,567.1 | 1,821.4 | 2,286.6 | 81.3 | 81.3 | 83.5 | 2.6 | 16.2 | 25.5 | -6.7 | 0.0 | 2.6 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | 1,090.7 | 1,522.4 | 1,877.5 | 56.6 | 67.9 | 68.5 | 1.1 | 39.6 | 23.3 | -8.0 | 20.0 | 0.9 |
| பணிகளிலுள்ள தொழிலாளர்கள் | 779.7 | 1,057.1 | 1,370.8 | 40.5 | 47.1 | 49.9 | 0.0 | 35.6 | 29.7 | -9.0 | 16.4 | 5.9 |

(அ) உண்மைக் கூலிவீதச்சுட்டெண் கொநுவிசு (2002=100) இனை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

நிறுவனங்கள் (அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள் மற்றும் அதிகாரசபைகள்) என்பனவற்றை உள்ளடக்கியுள்ள வேளையில் தனியார்துறை முறைசார்ந்த தனியார்துறை மற்றும் முறைசாரா தனியார்துறை[1] என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

**அரசதுறை ஊழியர்களின் கூலிகளும் சம்பளங்களும் அரசினால் முக்கியமாக வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றங்களில் கருத்திற் கொண்டு காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படுகின்றது.** முறைசார்ந்த தனியார் துறையின் கூலிகள், தனிப்பட்ட ஒப்பந்தங்கள் மூலமான கூலி அதிகரிப்புக்கள், கூட்டு ஒப்பந்தங்கள், தொழில்தருநர்களினால் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கூலி நிர்ணய சபையின் ஆகக் குறைந்த கூலி தொடர்பான தீர்மானங்கள் என்பனவற்றின் செல்வாக்கிற் குட்பட்டிருக்கின்ற வேளையில் முறைசாரா தனியார்துறையின் கூலிகள் தொழிலாளர் சந்தையில் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பல் காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றன.

**கூலி அபிவிருத்திகள் பொது விலைமட்டங்களில் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டிருப்பதனால், கூலிகளை மதிப்பிடுகின்ற நடவடிக்கைகள் காத்திரமான கொள்கை உருவாக்கத்திற்கு தவிர்க்க முடியாதவையாகும்.** அரச துறையிலுள்ள கூலி அசைவுகள், மத்திய அரசிலுள்ள நிறைவேற்று தரமல்லா தரங்கள் மற்றும் சிற்றூழியர்களையும் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களையும் உள்ளடக்கி மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட அலுவல்சார் கூலி வீதச் சுட்டெண்களினூடாக கண்காணிக்கப்படுகின்றன. முறைசார் தனியார்துறையிலுள்ள கூலிகள் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தகப் பணிகள் துறைகளுக்காக தொழில் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்களினூடாக கண்காணிக்கப்படுகின்றன. கூலி நிர்ணய சபையினால் ஆளப்படும் அனைத்து துறைகளுக்குமாக மாதாந்த அடிப்படையில் ஒரு திரட்டப்பட்ட கூலி வீதச் சுட்டெண்ணும் கணிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மற்றும் கட்டுமாணம் ஆகிய இரு துறைகளையும் உள்ளடக்கிய முறைசாராத் தனியார்துறையின் கூலிகளின் அசைவுகள் மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறையின் கீழ் சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பேணப்படுகின்றன.

### அரசதுறைக் கூலிகள்

**இவ்வாண்டு காலத்தில் இரு தடவைகள் அரசதுறை ஊழியர்களுக்கு மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியை அதிகரித்தமையின் மூலம் பெயரளவுக் கூலிகளில் மேல் நோக்கிய திருத்தங்கள் செய்யப்பட்ட போதும், 2008இல் அரசதுறை ஊழியர்களின் அனைத்து வகைகளினதும் உண்மைக் கூலி வீதச் சுட்டெண்கள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.** அரசாங்கத்தின் 2006ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைத் தொடர்ந்து, அரசதுறை ஊழியர்களுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி 2008 சனவரியில் ரூ.375 இனால் அதிகரிக்கப்பட்டமையானது, ஆண்டின் முதலரைப்பகுதியில் பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண்களில் 2.3 சதவீதமான சிறிய அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. எனினும் இது, இக்காலப்பகுதியில் விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினை ஈடுசெய்ய போதுமானதாக இருக்காமையினால் அரசதுறை ஊழியர்கள் அனைத்து வகையினரதும் உண்மைக் கூலி வீதச்சுட்டெண்களில் 11.5 சதவீதமான குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

**இதனைத் தொடர்ந்து 2008 யூலையில், அரசு, அரசதுறை ஊழியர்களின் கூலிகள் ஆயிரம் கொண்ட மேலதிக தொகையினால் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பு, ஆண்டின் பின்னரைப் பகுதியில் பெயரளவு கூலி வீதச்சுட்டெண்களில் குறிப்பிடத்தக்க நன்மையொன்றினை ஏற்படுத்தியது. எனினும், அரச ஊழியர்களின் உண்மைக்கூலிகள் சராசரியாக, 2008இல் 12.2 - 12.5 சதவீத வீச்சிலான இழப்புக்களினால் பாதிக்கப்பட்டன. அரசதுறை ஊழியர்களுக்கான மாதாந்த வாழ்க்கைப்படி தொடர்பாக 2008 யூலை 21ஆம் நாளிடப்பட்டு விடுக்கப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை எண் 15/2008 இன் நியதிகளில் ரூ.2,500 கொண்ட மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி (2008 யூன் வரை இது செலுத்தப்பட்டிருக்கிறது) 2008 யூலையிலிருந்து ரூ.1,000 இனால் உயர்த்தப்பட்டது. ஆரம்பத்தில் மாதாந்த சம்பளமாக ரூ.22,935 இற்கு குறைவாகப் பெறும் பதவிகளிலுள்ள அலுவலர்களுக்கு இது பொருந்தும். இதன் விளைவாக, அரச பணிகள், மாகாண அரச பணிகள் மற்றும் ஆயுதப்படைகளின் தகுதி வாய்ந்த வகைகளிலுள்ள ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி 2008 யூலையிலிருந்து ரூ.3,500 இற்கு உயர்த்தப்பட்டது. அதேவேளை, ஆரம்ப மாதாந்த சம்பளமாக ரூ.22,935 அல்லது அதற்கும் கூடுதலாகப் பெறும் அரச ஊழியர்களுக்கு ரூ.2,875 கொண்ட மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்பட்டது. மேலும் நாளாந்த ஊதியத்தைப் பெறுகின்ற ஊழியர்களுக்கு வேலைநாளொன்றிற்கு ரூ.116.66 என்ற வீதத்தில் வாழ்க்கைப்படியொன்றினைச் செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

**2008 யூலையிலிருந்து, மாதாந்த வாழ்க்கைச் செலவுப்படியில் செய்யப்பட்ட இம் மேல் நோக்கிய திருத்தத்தின் விளைவாக, அரசதுறை ஊழியர்களின் ஒட்டுமொத்த பெயரளவு கூலி வீதச்சுட்டெண், உண்மை நியதிகளில், கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் இத்தகைய சுட்டெண்களுடன் ஒப்பிடுகையில் 2008இல் 288 புள்ளிகளினால் அதிகரித்தது.** இதன்படி பெயரளவு நியதிகளில், நிறைவேற்றுத்தரமல்லா அலுவலர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் ஆகியோரின் கூலிச்சுட்டெண்கள், சராசரியாக, 2007இன் அச்சுட்டெண்களுடன் ஒப்பிடுகையில் முறையே 7.3 சதவீதத்தினாலும், 7.7 சதவீதத்தினாலும், 7.2 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. இதன் விளைவாக, மத்திய அரசாங்க ஊழியர்களின் பொதுவான பெயரளவு கூலி வீதச்சுட்டெண் 7.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மாறாக, இவ்வூழியர்களின் உண்மைக் கூலி வீதச்சுட்டெண்கள் 2007இன் அத்தகைய சுட்டெண்களுடன் ஒப்பிடுகையில் முறையே 12.5 சதவீதத்தினாலும், 12.2 சதவீதத்தினாலும் 12.5 சதவீதத்தினாலும் 2008இல் வீழ்ச்சியடைந்தன. மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளின் இணைந்த விளைவாக, மத்திய அரச ஊழியர்களின் பொதுவான உண்மைக் கூலி வீதச்சுட்டெண் முன்னைய ஆண்டிலும் பார்க்க 12.4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

1. முறைசார் தனியார் துறையென்பது பொது ஊழியர் சேமலாபநிதியம் (ஊ.சே.நி) அல்லது தொழில் ஆணையாளர் நாயகத்தினால் அங்கிகாரமளிக்கப்பட்ட தமது சொந்த சேமலாப நிதியங்களை (அவ்வாறான ஏதாவதொரு இளைப்பாற்று நலத்திட்டம்) பேணிவருகின்ற நிறுவனங்களை உள்ளடக்குகின்றது. முறைசாராத் தனியார் துறை என்பது ஊ.சே.நிதிய இளைப்பாற்று நன்மைகளை கொண்டிருக்காத எஞ்சிய தனியார்துறையாகும்.

அட்டவணை 4.6 துறை மற்றும் பால் அடிப்படையில் முறைசாரா தனியார் துறையின் நாளாந்த கூலிகள் (அ)

| துறை | ஆண்டுச்சராசரி (ரூபா) | | | சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெயரளவு | | உண்மையான(ஆ) | |
| | 2006 | 2007 | 2008(இ) | 2007 | 2008(இ) | 2007 | 2008(இ) |
| 1. வேளாண்மைத்துறை | | | | | | | |
| தேயிலை | | | | | | | |
| ஆண் | 333 | 375 | 440 | 12.8 | 17.3 | -3.0 | -5.3 |
| பெண் | 234 | 263 | 304 | 12.4 | 15.5 | -3.4 | -7.1 |
| இறப்பர் | | | | | | | |
| ஆண் | 335 | 389 | 498 | 16.1 | 28.1 | 0.3 | 5.5 |
| பெண் | 249 | 277 | 374 | 11.3 | 35.0 | -4.5 | 12.4 |
| தெங்கு (ஈ) | | | | | | | |
| ஆண் | 421 | 479 | 590 | 13.8 | 23.1 | -2.0 | 0.5 |
| நெல் | | | | | | | |
| ஆண் | 391 | 456 | 563 | 16.7 | 23.4 | 0.9 | 0.8 |
| பெண் | 293 | 336 | 392 | 14.8 | 16.4 | -1.0 | -6.2 |
| 2. கட்டடவாக்கத்துறை (ஈ) | | | | | | | |
| மரவேலையாளர் | | | | | | | |
| முதன்மை மரவேலையாளர் - ஆண் | 633 | 732 | 845 | 15.6 | 15.3 | -0.2 | -7.3 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 416 | 479 | 558 | 15.2 | 16.6 | -0.6 | -6.0 |
| கொத்தனார் | | | | | | | |
| முதன்மை கொத்தனார் - ஆண் | 629 | 727 | 838 | 15.8 | 15.1 | 0.0 | -7.5 |
| தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற உதவியாளர் - ஆண் | 413 | 474 | 561 | 14.7 | 18.4 | -1.1 | -4.2 |

(அ) கூலித்தகவல்கள் 90 நிலையங்களிலிருந்தான மாதாந்த கூலிகளை அடிப்படையாகக் கொண்டவை.
(ஆ) உண்மைக் கூலி சதவீத மாற்றங்கள் கொநுவி(2002=100) இனை அடிப்படையாகக் கொண்டவை.
(இ) தற்காலிகமானவை.
(ஈ) தெங்கு மற்றும் நிருமாணத்துறைகளில் பெண் பற்கேற்பு குறைவாகும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## முறைசார்ந்த தனியார்துறைக் கூலிகள்

முறைசார்ந்த தனியார்துறைக் கூலிகளின் அசைவுகள், கூலி நிர்ணய சபையின் கீழான ஒழுங்கு விதிகளால் நிருவகிக்கப்படுகின்ற கூலிகளைக் கொண்ட ஊழியர்களின் ஆகக் குறைந்த கூலி வகைகளை உள்ளடக்கிய ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்களினூடாக கண்காணிக்கப்படுகின்றன. வேளாண்மை, கைத்தொழில் மற்றும் வர்த்தக மற்றும் பணிகள் ஆகிய முறைசார்ந்த தனியார்துறையின் மூன்று முக்கிய துறைகளினதும் ஆகக் குறைந்த கூலி வீதச்சுட்டெண்கள், பெயரளவு நியதிகளில் 2008இல் முறையே 25.5 சதவீதத்தினாலும் 23.3 சதவீதத்தினாலும் 29.7 சதவீதத்தினாலும் அதிகரித்த வேளையில், பெயரளவு நியதிகளில் அனைத்து வகைகளினதும் பொதுவான கூலி வீதச்சுட்டெண் 2007இல் 25.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. கூலி வீத துணைச்சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வேளாண்மைத்துறையிலுள்ள ஆகக் குறைந்த கூலிகள் 2008 மாச்சில் 17.1 சதவீதத்தினாலும் 2008 யூலையில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறைகளின் அத்தகைய கூலிகள் 19.3 சதவீதத்தாலும் 2008 யூலையில் பணிகள் துறையின் கூலிகள் 29.3 சதவீதத்தாலும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். இது, அரசாங்கம் தனியார்துறை ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் நடத்திய தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் பெறுபேறாகும். ஆகக் குறைந்த கூலிகளின் இவ்வதிகரிப்பு 40 கூலி நிர்ணயச் சபைகளினால் பின்பற்றப்பட்டது.

பெயரளவு அபிவிருத்திச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களை கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (2002 = 100) அடிப்படையில் பணவீக்கத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட பொழுது 2008இல் அனைத்து மூன்று முக்கிய துறைகளிலுமுள்ள முறைசார்ந்த தனியார்துறை ஊழியர்களும் அவர்களது உண்மைக் கூலிகளில் சிறிதளவு அதிகரிப்புக்களை மட்டுமே அனுபவித்தனர். கடந்த சில ஆண்டு காலமாக வேளாண்மைத்துறையிலுள்ள ஊழியர்கள் உண்மைக் கூலி இளப்பீடுகளினால் பாதிக்கப்பட்டதற்கு மாறாக 2008இல் முதல் தடவையாக உண்மைக் கூலி அதிகரிப்புக்களிலிருந்து நன்மைகளைப் பெற்றனர். பணிகள்துறை, 2007ஆம் ஆண்டின் 16.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் உண்மைக் கூலிகளில் 5.9 சதவீத அதிகரிப்பினை மட்டுமே பதிவு செய்தது. எனினும், கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறைகளிலுள்ள ஊழியர்களின் உண்மைக் கூலிகளின் அதிகரிப்பு 2007இன் 20.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2008இல் 0.9 சதவீதமாக சிறிதளவில் காணப்பட்டது.

## முறைசாராத் தனியார்துறைக் கூலிகள்

முறைசாராத் தனியார்துறையிலுள்ள பெயரளவு கூலிகள் நிலவுகின்ற சந்தை நிலைமைகள், உயர்வடைந்து செல்லும் வாழ்க்கைச் செலவுப்படி, பல்வேறு நடவடிக்கைகளிலுமுள்ள தொழிலாளர் செறிவின் அளவு மற்றும் வேறுபட்ட நடவடிக்கைகளிலிருந்தும் பிரதேசங்கள் போன்றவற்றிலிருந்தும் தொழிலாளர்கள் இடம் பெயரக்கூடிய மாற்று வாய்ப்புக்களின் கிடைப்பனவு போன்ற காரணிகளின் செல்வாக்கிற்குட்பட்டுள்ளன. வேளாண்மை மற்றும் கட்டுமாணத் துறைகளை உள்ளடக்கி நாடாளவிய தரவு சேகரிப்பு முறையின் கீழ் சேகரிக்கப்பட்ட முறைசாரா துறையின் நாளாந்த கூலிகள் மீதான தகவல்கள் 2008இன் கூலி வீதங்களில் அதிகரித்த, குறைந்த தன்மைகளைக் கொண்ட கலப்பான அசைவுகளைக் காட்டின.

அட்டவணை 4.7 மாவட்ட அடிப்படையில் குடித்தொகை

'000 ஆட்கள்

| மாவட்டம் | 2007 | 2008(அ) | மாற்றம் (அ) | சதவீத மாற்றம் (அ) |
|---|---|---|---|---|
| கொழும்பு | 2,456 | 2,488 | 32 | 1.3 |
| கண்டி | 1,380 | 1,396 | 16 | 1.2 |
| இரத்தினபுரி | 1,086 | 1,099 | 13 | 1.2 |
| பதுளை | 850 | 861 | 11 | 1.3 |
| குருநாகல் | 1,524 | 1,535 | 11 | 0.7 |
| கம்பகா | 2,140 | 2,152 | 12 | 0.6 |
| காலி | 1,052 | 1,063 | 11 | 1.0 |
| அநுராதபுரம் | 801 | 809 | 8 | 1.0 |
| களுத்துறை | 1,111 | 1,118 | 7 | 0.6 |
| மாத்தறை | 813 | 822 | 9 | 1.1 |
| நுவரெலியா | 742 | 749 | 7 | 0.9 |
| அம்பாறை | 615 | 624 | 9 | 1.5 |
| மட்டக்களப்பு | 523 | 530 | 7 | 1.3 |
| புத்தளம் | 752 | 760 | 8 | 1.1 |
| யாழ்ப்பாணம் | 599 | 603 | 4 | 0.7 |
| மாத்தளை | 477 | 483 | 6 | 1.3 |
| திருகோணமலை | 355 | 361 | 6 | 1.7 |
| அம்பாந்தோட்டை | 552 | 558 | 6 | 1.1 |
| மொனராகலை | 425 | 430 | 5 | 1.2 |
| பொலனறுவை | 395 | 400 | 5 | 1.3 |
| முல்லைத்தீவு | 147 | 150 | 3 | 2.0 |
| கிளிநொச்சி | 146 | 150 | 4 | 2.7 |
| வவுனியா | 166 | 167 | 1 | 0.6 |
| கேகாலை | 802 | 807 | 5 | 0.6 |
| மன்னார் | 101 | 102 | 1 | 1.0 |
| மொத்தம் | 20,010 | 20,217 | 207 | 1.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை

மூலம்: பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்

**2008இல் வேளாண்மைத்துறை மற்றும் கட்டுமாணத் துறைகளிலுள்ள முறைசாராத்துறையின் கூலிகள் முன்னைய ஆண்டினை விட முறையே 23 சதவீத, 16 சதவீத அதிகரிப்புக்களை பதிவு செய்தன.** நெல், தெங்கு, தேயிலை மற்றும் இறப்பர் ஆகிய துணை வகைகளின் சராசரி நாளாந்தக்கூலிகள் 2008இல் முறையே 21 சதவீதத்தினாலும், 23 சதவீதத்தினாலும் 17 சதவீதத்தினாலும் 31 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இத்துணைத்துறைகளின் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, அவர்களது உண்மைக்கூலிகளை குறிப்பிட்டதொரு மட்டத்தில் பேணும் பொருட்டு உயர்ந்த நாளாந்த கூலிகளுக்காக இத் தொழிலாளர்கள் மேற்கொள்ளப்பட்ட கூலிக்கோரிக்கைகளே ஓரளவு காரணமாகும். குறிப்பிட்ட சில ஏற்றுமதி செய்யப்பட்ட விடயங்களின், குறிப்பாக தேயிலை, இறப்பர் என்பனவற்றின் விலைகள் ஆண்டின் பிற்பகுதியில் பன்னாட்டுச் சந்தைகளில் வீழ்ச்சியடைந்த போதும் உள்நாட்டுச் சந்தையில் மற்றைய பண்டங்களின் (தெங்கு மற்றும் நெல்) விலைகள், சராசரியாக, ஒப்பீட்டு அடிப்படையில் அதிகரித்தமையானது தொழிலாளர்களுக்கு உயர்ந்த கொடுப்பனவுகளைச் செய்வதற்கு உற்பத்தியாளர்களை இயலச்செய்தது. எனினும், வேளாண்மைத்துறையில் பெரும்பாலான துணைத்துறைகளிலுள்ள நாளாந்த கூலிகளின் அதிகரிப்பு வீதங்கள் வேறுபட்ட நடவடிக்கைகளிடையே காணப்பட்ட பன்முகத்தன்மைகளின் காரணமாக வேறுபட்டன.

**நாளாந்த கூலி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் பணவீக்கத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட போது 2008இல் கட்டுமாணத்துறையிலும் வேளாண்மைத்துறையிலுமுள்ள துணை வகை துறைகளில் அதாவது தேயிலை மற்றும் நெல் (பெண் தொழிலாளர்கள்) வகைகளிலுள்ள ஊழியர்கள் தமது உண்மைக் கூலிகளில் இழப்புக்களை எதிர்நோக்கினர்.** எனினும், இறப்பர், தெங்கு மற்றும் நெல் துணைத்துறைகளிலிருந்தவர்கள் (ஆண் தொழிலாளர்கள்) அவர்களது உண்மைக் கூலிகளில் அதிகரிப்புக்களை அனுபவித்தனர். கட்டுமாணத்துறையிலுள்ள தச்சுவேலை, கொத்தனார் வேலைகளுக்கான நாளாந்த கூலிகள் ஏறத்தாழ 16 சதவீத அதிகரிப்புக்களை பதிவு செய்தமைக்கு, இத்தொழிலாளர்களினால் கோரப்பட்ட உயர்ந்த கூலிகளும் கட்டுமாண நடவடிக்கைகளுக்கான தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக காணப்பட்ட கேள்வியும் வெளிநாட்டுக்கு தொழில் நிலைக்காக புலம்பெயர்வதன் காரணமாக அத்தகைய தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கான பற்றாக்குறையும் காரணங்களாக அமைந்தன. எனினும், இத்தொழிலாளர்களும் கடந்த ஆண்டினைப் போன்றே 2008இலும் உண்மைக் கூலிகளில் இழப்புக்களை அனுபவித்தனர்.

## 4.4 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டவாறு 2008இன் நடுவாண்டுக் குடித்தொகை 2007இல் பதிவு செய்யப்பட்ட 0.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20.2 மில்லியனுக்கு 1.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்து பதிவு செய்யப்பட்டன. உயர்ந்த அதிகரிப்புக்கள் கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, கம்பகா, குருநாகல், பதுளை மற்றும் காலி மாவட்டங்களிலிருந்து பதிவு செய்யப்பட்டதுடன் இவை 2008இன் ஒட்டு மொத்த வளர்ச்சியில் 50 சதவீதத்திற்கும் கூடுதலாகப் பங்களித்த வேளையில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வளர்ச்சி வீதங்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலிருந்து பதிவு செய்யப்பட்டன.

### தொழிற்படை


**இலங்கையில் தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலின்மை மட்டங்கள் மற்றும் போக்குகள் என்பன தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டின் வழிமுறைகளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.** தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், முழு நாட்டையும் உள்ளடக்கும் விதத்தில் அதன் மாதிரி உள்ளடக்கத்தை விரிவாக்குவதற்கு திட்டமிட்டிருந்த போதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில மாவட்டங்களில் நிலவும் தீர்வு காணப்படாத பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக கடந்த மூன்றாண்டுகளாக காலாண்டு தொழிற்படை அளவீட்டினால் அம்மாகாணங்களை முழுமையாக உள்ளடக்க முடியவில்லை. அதேவேளை, 2008இன் முதற் காலாண்டிலிருந்து தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களையும் உள்ளடக்கி அளவீடுகளை நடத்தத் தொடங்கியுள்ளது. எனினும், விபரமான ஒப்பீடுகளுக்காக பகுப்பாய்வில் பயன்படுத்தப்பட்ட தரவுகள் வேறுவிதமாகக் கூறப்பட்டாலன்றி தொழிற்படைத் தரவுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்தனவாகவே இருக்கும்.

இதன்படி, வேலை செய்யக்கூடிய, வேலை செய்ய விரும்புகின்ற 10 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட ஆட்களையும் உள்ளடக்குகின்றது என வரைவிலக்கணம் செய்யப்பட்ட **தொழிற்படையானது முன்னைய ஆண்டின் 7.5 மில்லியனுடன் ஒப்பிடுமிடத்து 2008இல் 7.6 மில்லியனுக்கு சிறிதளவு அதிகரித்தது.** மொத்த தொழிற்படை 7.2 மில்லியன் தொழிலுள்ளவர்களையும் 0.4 மில்லியன் தொழிலற்றவர்களையும் உள்ளடக்குகிறது. அதேவேளை, 10 வயதிற்கும் அதற்கு கூடுதலுமான குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாக குறிப்பிடப்படும் தொழிற்படைப் பங்கேற்புவீதம் 2007இன் 49.8 சதவீதத்திலிருந்து 2008இல் 50.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு தொழிற்படை பங்கேற்புவீதத்தின் ஆண், பெண் இரு வகைகளிலும் காணப்பட்டதுடன் முறையே 67.9 சதவீதமாகவும் 34.3 சதவீதமாகவும் இவை விளங்கின. கடந்த பல ஆண்டுகளாக தொழிற்படையின் பங்கேற்பு வீதத்தின் பால்வகையான பகுப்பாய்வானது கடந்த அண்மைக் காலத்தில் ஆண்களின் பங்கேற்புவீதம் பெண்களினுடையதை விட பெரும்பாலும் இருமடங்கானது என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

## தொழில்நிலை

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டு தொழிற்படை அளவீடு **தொழில்புரியும் ஆள் என்பது அளவீட்டுக் காலத்தில் சம்பளத்திற்காக அல்லது இலாபத்திற்காக அல்லது குடும்பத்தின் நன்மைக்காக (கொடுப்பனவின்றி) ஏதோவொரு வகையான வேலையில் ஈடுபட்டுள்ள ஒருவர் என வரைவிலக்கணம் செய்கிறது.** தொழில்நிலை தகைமைகளின்படி, அளவீட்டுக் காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ஆட்களாக தொழில்புரிந்த ஆட்கள், தொழில்தருநர்கள், சொந்தமாக தொழில்புரிவோர், (சுய தொழில்புரிவோர்) அல்லது கொடுப்பனவு செலுத்தப்படாத குடும்ப வேலையாட்கள் ஆகியோர் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டில் தொழிலுள்ள ஆட்களாகக் கருதப்பட்டனர். இது, அளவீட்டுக் காலப்பகுதியில் ஒருவர் தொழிலில் ஈடுபடாத போதும் அவர் தொழிலொன்றைக் கொண்டிருப்பாராயின் அவரையும் உள்ளடக்குகிறது. சுகயீனம், மோசமான வானிலை மற்றும் தொழிலாளர் பிணக்குகள் காரணமாக தற்காலிகமாக தொழிலுக்குச் செல்லாத ஊழியர்களும் தொழில் புரிபவர்களாகவே கருதப்படுவர்.

வரைபடம் 4.2 தொழிற்படை மற்றும் தொழிலின்மையின் போக்கு 2004-2008




**காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின்படி 2008இல் தொழில்புரியும் ஆட்களின் எண்ணிக்கையானது 2007இன் 7.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 7.2 மில்லியனுக்கு 1.9 சதவீதத்தினால் அதிகரித்தது.** இவ்வதிகரிப்பிற்கு பொருளாதாரத்தின் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முழுமையாக நடைமுறைக்கிடப்பட்டதன் விளைவாக தொழில் வாய்ப்புக்கள் உயர்வடைந்தமை பகுதியளவில் காரணமாகும்.

முக்கிய கைத்தொழில் தொகுதிகளிடையே தொழிற் குடித்தொகையின் உள்ளடக்கம் 2008இல் சிறிய மாற்றமொன்றினைப் பதிவு செய்து, **வேளாண்மைத்துறையின் பங்கினை 2007உடன் ஒப்பிடுகையில் 31.3 சதவீதத்திலிருந்து 32.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.** அதேவேளை, கைத்தொழில் மற்றும் பணிகளின் பங்குகள் தொடர்பான காலப்பகுதிகளுக்கிடையில் முறையே 26.6 சதவீதத்திலிருந்து 26.3 சதவீதத்திற்கு 42.1 சதவீதத்திலிருந்து 41.0 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. எனினும், பணிகள்துறை மொத்த தொழிற் குடித்தொகையின் மிகப்பெரும் பங்கினை இன்னமும் பேணி வருகின்றது. அதேவேளை, தொழில்நிலை தகைமைகளின்படி, அரச துறை ஊழியர்கள், தொழில்தருனர் மற்றும் கொடுப்பனவற்ற குடும்ப வேலையாட்களின் பங்கு 2008இல் அதிகரித்த வேலையில் தனியார்துறை ஊழியர்கள், சுயதொழில்புரிவோரின் பங்கு 2007உடன் ஒப்பிடுமிடத்து வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 4.8 குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)

| விடயம் | 2006 | 2007 | 2008 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1ஆம் கால் | 2ஆம் கால் | 3ஆம் கால் | 4ஆம் கால் | ஆண்டுக்கானது |
| குடும்ப அலகுகளின் குடித்தொகை (ஆ) '000 ஆட்கள் | 14,834 | 15,048 | 15,112 | 15,141 | 14,852 | 15,212 | 15,079 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 7,599 | 7,489 | 7,531 | 7,506 | 7,588 | 7,650 | 7,569 |
| தொழிலில் உள்ளோர் | 7,105 | 7,042 | 7,148 | 7,106 | 7,192 | 7,252 | 7,175 |
| தொழிலற்றோர் | 493 | 447 | 382 | 400 | 396 | 398 | 394 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ) சதவீதம் | 51.2 | 49.8 | 49.8 | 49.6 | 51.1 | 50.3 | 50.2 |
| ஆண் | 68.1 | 67.8 | 67.3 | 67.8 | 69.1 | 67.6 | 67.9 |
| பெண் | 35.7 | 33.4 | 34.2 | 33.1 | 34.9 | 35.0 | 34.3 |

(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஆ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
(இ) பத்து வயதும் அதற்கு மேற்பட்டோரையும் கொண்ட குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்.

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 4.9** **பொருளாதார செயற்பாடுகளின்படி தொழில்நிலை (அ)**

| துறை | '000 ஆட்கள் 2006 | 2007 | 2008 1ஆம் கால் | 2008 2ஆம் கால் | 2008 3ஆம் கால் | 2008 4ஆம் கால் | 2008 ஆண்டுக்கானது | மொத்த தொழில் நிலையின் சதவீதம் 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை** | **2,287** | **2,202** | **2,272** | **2,141** | **2,495** | **2470** | **2344** | **32.2** | **31.3** | **32.7** |
| **கைத்தொழில்** | **1,890** | **1,874** | **1,890** | **1,936** | **1,878** | **1848** | **1888** | **26.6** | **26.6** | **26.3** |
| தயாரிப்பு | 1,363 | 1,331 | 1,334 | 1,371 | 1,370 | 1346 | 1355 | 19.2 | 18.9 | 18.9 |
| கட்டடவாக்கம் (ஆ) | 527 | 543 | 557 | 565 | 508 | 502 | 533 | 7.4 | 7.7 | 7.4 |
| **பணிகள்** | **2,928** | **2,966** | **2,986** | **3,030** | **2,819** | **2934** | **2943** | **41.2** | **42.1** | **41.0** |
| வர்த்தகம், உணவகங்கள் முதலியன | 1,084 | 1,051 | 1,066 | 1,077 | 974 | 996 | 1028 | 15.3 | 14.9 | 14.3 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 430 | 457 | 434 | 411 | 398 | 459 | 426 | 6.1 | 6.5 | 5.9 |
| நிதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து | 221 | 215 | 236 | 240 | 246 | 223 | 236 | 3.1 | 3.1 | 3.3 |
| தனிப்பட்ட பணிகள் மற்றும் ஏனையவை | 1,192 | 1,243 | 1,250 | 1,302 | 1,203 | 1256 | 1253 | 16.8 | 17.7 | 17.5 |
| **மொத்தத் தொழில்நிலை** | **7,105** | **7,042** | **7,148** | **7,106** | **7,192** | **7252** | **7175** | **100.0** | **100.0** | **100.0** |
| தொழிற்படையின் சதவீதம் | 93.5 | 94.0 | 94.9 | 94.7 | 94.8 | 94.8 | 94.8 | | | |

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தரவுகளில் தவிர்க்கப்பட்டுள்ளன.
(ஆ) சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் என்பன கட்டடவாக்கத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

## தொழிலின்மை

**காலாண்டு தொழிற்படை அளவீட்டின்படி, தொழிலின்மை வீதம் 2007இல் பதிவு செய்யப்பட்ட 6.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு உறுதியாக தொடர்வதை எடுத்துக் காட்டுகின்றது.** 2008இல் தொழிலற்றோரின் மொத்த எண்ணிக்கை 394,000 என மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் 447,000இலும் பார்க்க குறைவானதாகும். தொழிலற்றோர் குடித்தொகையில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு, தொழிற்சந்தையில் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிய தொழிலுக்கமர்த்தக்கூடிய தன்மையினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொழில் உருவாக்குதல் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்களின் அமுலாக்கமே முக்கிய காரணமாகும். தொழில்சந்தை தகவல்களை பரப்புவதில் ஏற்பட்ட முன்னேற்றமும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் தொழிலின்மை வீதம் குறைவடைவதில் பங்களித்தன.

**இளைஞர்களிடையேயான தொழிலின்மை, குறிப்பாக கல்விகற்ற பெண்களிடையேயான தொழிலின்மை வீதம், தொடர்ந்து வருவது காலாண்டு தொழிற்படை அளவீட்டில் தெளிவாக புலனாகுகின்றது.** கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டவாறு தொழிலின்மை வீதம் 15 - 19 வயதுத்தொகுதியினரிடையே மிக அதிகமாகக் காணப்பட்டது. எனினும், காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின் மதிப்பீடுகளின்படி, இவ்வயதுத் தொகுதியினரிடையேயான தொழிலின்மை வீதம் 2007இன் 21.6 சதவீதத்திலிருந்து 2008 இல் 20.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், உயர்ந்த தொழிலின்மை வீதமான 24.4 சதவீதம் யுவதிகளிடையே பதிவு செய்யப்பட்டதுடன் இது இளைஞரிடையே காணப்பட்ட 14.4 சதவீதத்தினை விட உயர்வானதாகும். மிகக்கடுமையானதும் கவனிக்கத்தக்கதுமான பண்புயாதெனில், உயர்ந்த தொழிலின்மை வீதம் மற்றையவர்களைவிட படித்த இளைஞரிடையே காணப்பட்ட வேளையில் பிரச்சனையின் மிகத் தீவிரமானதன்மை கற்ற இளைஞர்களை விட கற்ற யுவதிகளிடையே காணப்படுவதேயாகும். கல்வி மட்டத்திலான தொழிலின்மையைக் கருத்திற்கொள்கையில் உயர்ந்த தொழிலின்மை வீதமான 9.9 சதவீதம் க.பொ.த. உயர்தரத்தையும் அதற்கு மேலான தகைமைகளையும் கொண்டவர்களிடையே பதிவு செய்யப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து க.பொ.த. (சாதாரண) தகைமை பெற்றவர்களிடையே (7.4 சதவீதம்) பதிவு செய்யப்பட்டது. சந்தையிலுள்ள தொழில் வாய்ப்புக்களுக்கும்

**அட்டவணை 4.10** **தொழில்நிலைத் தகைமை (அ)**

சதவீதம்

| காலம் | அரசதுறை ஊழியர்கள் | தனியார் துறை ஊழியர்கள் | தொழில் தருநர் | சுய வேலை செய்வோர் | கொடுப்பனவற்ற குடும்ப வேலையாட்கள் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 2006 | 13.4 | 42.1 | 3.1 | 30.8 | 10.5 | 100.0 |
| 2007 | 13.8 | 42.7 | 2.8 | 30.4 | 10.3 | 100.0 |
| **2008** (ஆண்டு) | **14.9** | **41.1** | **3.0** | **30.2** | **10.8** | **100.0** |
| 1ஆம் காலாண்டு | 14.9 | 40.4 | 3.1 | 31.7 | 9.9 | 100.0 |
| 2ஆம் காலாண்டு | 15.3 | 41.0 | 3.1 | 30.2 | 10.4 | 100.0 |
| 3ஆம் காலாண்டு | 14.7 | 41.1 | 2.7 | 30.1 | 11.4 | 100.0 |
| 4ஆம் காலாண்டு | 14.7 | 41.9 | 3.0 | 29.0 | 11.4 | 100.0 |

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களின் தரவுகள் உள்ளடக்கப்படவில்லை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 4.11** **அரசதுறை தொழில்நிலை**

| துறை | 2006 | 2007 | 2008(அ) | சதவீத மாற்றம் 2007/2006 | 2008/ 2007(அ) |
|---|---|---|---|---|---|
| அரசு (ஆ) | 887,674 | 937,494 | 997,458 | 5.6 | 6.4 |
| அரசுசார் (இ) | 258,049 | 259,116 | 261,318 | 0.4 | 0.8 |
| **அரசதுறை** | **1,145,723** | **1,196,610** | **1,258,776** | **4.4** | **5.2** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மற்றும் மாகாண சபைகள்
(இ) அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அரச மேலாண்மைச் சபைகள் போன்றவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4.12** **தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் சதவீதமாக தொழிலற்றோர்) (அ)**

| வகை | 2006 | 2007 | 2008 1ஆம் காலாண்டு | 2008 2ஆம் காலாண்டு | 2008 3ஆம் காலாண்டு | 2008 4ஆம் காலாண்டு | 2008 ஆண்டுக்கானது |
|---|---|---|---|---|---|---|---|
| **அனைத்து** | **6.5** | **6.0** | **5.1** | **5.3** | **5.2** | **5.2** | **5.2** |
| **பால் வகைப்படி** | | | | | | | |
| ஆண் | 4.7 | 4.3 | 3.3 | 3.6 | 3.8 | 3.8 | 3.6 |
| பெண் | 9.7 | 9.0 | 8.2 | 8.4 | 7.8 | 7.7 | 8.0 |
| **வயது அடிப்படையில்** | | | | | | | |
| 15 - 19 | 23.1 | 21.6 | 23.0 | 20.8 | 20.1 | 19.0 | 20.6 |
| 20 - 29 | 15.9 | 15.0 | 13.4 | 13.0 | 13.0 | 13.4 | 13.2 |
| 30 - 39 | 3.3 | 3.3 | 2.8 | 2.8 | 3.4 | 3.2 | 3.1 |
| 40 உம் அதற்கு மேல் | 1.4 | 1.3 | 1.0 | 1.5 | 1.2 | 1.1 | 1.2 |
| **கல்விமட்ட அடிப்படையில்** | | | | | | | |
| வகுப்பு 4/ ஆண்டு 5 மற்றும் அதற்குக்கீழ் | ... | 1.3 | ... | ... | ... | .... | 1.1 |
| வகுப்பு 5-9/ 6-10ஆண்டு | 5.8 | 5.2 | 4.0 | 4.5 | 4.4 | 5.1 | 4.5 |
| க.பொ.த (சா.த)/ பொ.க.தே.சா | 9.9 | 8.2 | 6.4 | 7.6 | 7.9 | 7.6 | 7.4 |
| க.பொ.த (உ...த)/ தே.க.பொ.த.ப மற்றும் அதற்குமேல் | 11.6 | 11.8 | 11.0 | 9.1 | 10.4 | 8.9 | 9.9 |

(அ) தரவுகளில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

தொழிலற்றவர்களின் அபிலாசைகளுக்குமிடையே தொடர்ச்சியாக இருந்துவரும் பொருத்தப்பாடின்மை இப்பிரச்சனைக்கான முக்கிய காரணமாகும்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**கடந்த பல ஆண்டுகளாக வெளிநாட்டு வேலைவாய்ப்பில் காணப்படும் உறுதியான அதிகரிப்பு, வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களுக்கும் இலங்கையின் தொழிலின்மையின் மீதான அழுத்தங்களைக் குறைப்பதற்கும் குறிப்பிடத்தக்களவிற்கு பங்களித்துள்ளது.** 2008இல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு 2007இன் 8.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 15.4 சதவீத அதிகரிப்பினை பதிவு செய்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மதிப்பீடுகளின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டின் 218,459 உடன் ஒப்பிடுகையில் 2008இல் 252,021 ஆகக் காணப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு வீட்டுப் பணிப்பெண்கள், தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர்கள் ஆகிய அனைத்து வகை மனித வலுக்களிலும் அவதானிக்கப்பட்டது. செயல்முறைகளைக் குறைப்பதற்கும் வெளிநாட்டு தொழிற்சந்தைத் தேவைப்பாடுகளுக்கு பொருந்தத்தக்க வீதத்தில் தொழில் அபிலாசைகளைத் தயார்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகள் இவ்வாண்டில் வெளிநாட்டு தொழிற்சந்தைகளின் வாய்ப்புக்களை மேம்படுத்தின. நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியின் முக்கிய மூலமாக இது விளங்குவதுடன் 2008இன் மொத்த வெளிநாட்டு பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 2,918 மில்லியன்களாக விளங்கியதுடன் கடந்த ஆண்டில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 2,502 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 16.6 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பிற்கு குடிபெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்தான வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு வங்கிகள், உரிமம்பெற்ற வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் ஊடகத்துறை என்பனவற்றின் உதவியுடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விழிப்புணர்வு இயக்கமொன்றினை மேற்கொண்டமையே முக்கிய காரணமாகும்.

**அட்டவணை 4.13** **வெளிநாட்டுத் தொழில்நிலை**

| தொழில்நிலை | 2006 எண்ணிக்கை | 2006 சதவீதம் | 2007 எண்ணிக்கை | 2007 சதவீதம் | 2008(அ) எண்ணிக்கை | 2008(அ) சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| **தொழிலிலுள்ளோர்** | **201,948** | **100.0** | **218,459** | **100.0** | **252,021** | **100.0** |
| **மூலத்தின்படி** | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 141,177 | 69.9 | 146,515 | 67.1 | 162,117 | 64.3 |
| ஏனையோர் | 60,771 | 30.1 | 71,944 | 32.9 | 89,904 | 35.7 |
| **பால் வகையின்படி** | | | | | | |
| ஆண்கள் | 90,170 | 44.7 | 103,482 | 47.4 | 128,821 | 51.1 |
| பெண்கள் | 111,778 | 55.3 | 114,977 | 52.6 | 123,200 | 48.9 |
| **மனித வலு வகை** | | | | | | |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 99,659 | 49.3 | 102,349 | 46.9 | 108,709 | 43.1 |
| ஏனையோர் | | | | | | |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் | 45,063 | 22.3 | 53,462 | 24.5 | 65,124 | 25.8 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 40,705 | 20.2 | 52,182 | 23.9 | 59,427 | 23.6 |
| ஏனையோர் | 16,521 | 8.2 | 10,466 | 4.8 | 18,761 | 7.4 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**அட்டவணை 4.14 நாடுகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றோர்**

| நாடு | 2007 | | 2008 (அ) | | மாற்றம் (அ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | பங்கு | எண்ணிக்கை | சதவீதம் |
| கட்டார் | 38,943 | 17.8 | 39,543 | 15.7 | 600 | 1.5 |
| சவுதி அரேபியா | 60,489 | 27.7 | 67,804 | 26.9 | 7,315 | 12.1 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 38,018 | 17.9 | 51,763 | 20.5 | 12,745 | 32.7 |
| குவைத் | 41,028 | 18.8 | 47,168 | 18.7 | 6,140 | 15.0 |
| ஏனையவை | 38,981 | 17.8 | 45,743 | 18.2 | 6,762 | 17.3 |
| **மொத்தம்** | **218,459** | **100.0** | **252,021** | **100.0** | **33,562** | **15.4** |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்படி, இலங்கையின் குடிபெயர்ந்த குடித்தொகை ஏறத்தாழ 1.8 மில்லியன்களாகும்.** மொத்த குடிபெயர்ந்த குடித்தொகையில், குடிபெயர்ந்த பெண் தொழிலாளர்கள் மற்றையவர்களை கூடுதலாகக் காணப்பட்டதுடன் 65 சதவீதம் கொண்ட முக்கிய பங்கிற்கும் வகை கூறினர். எனினும், வருடாந்தம் புறப்பட்டுச் சென்றவர்களின்படி, ஆண்களின் குடிபெயர்வு கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்தும் அதிகரித்ததுடன் 2008இன் மொத்த குடிபெயர்வில் பெண்களை விஞ்சி 51:49 என்ற விகிதத்தில் ஆதிக்கம் செலுத்தினர். இது, குடிபெயர்ந்தோரின் பால் வகை உள்ளடக்கத்தில் ஒரு முக்கியமான மாற்றமாகவும் இருந்தது. இதனையும் பன்னாட்டுச் சந்தைகளில் தேவைப்படும் நியமங்களை எதிர்கொள்வதற்கான தேர்ச்சிகள் போதாமல் இருப்பதனையும் பிரதிபலித்து வீட்டுப்பணிக்காக சென்றவர்களின் எண்ணிக்கை 2007இன் 46.9 சதவீதத்திலிருந்து 2008இல் 43.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்களின் குடிபெயர்விலான அதிகரிப்பு மற்றைய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் நடத்தப்பெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தினதும் மத்திய கிழக்கு நாடுகளில் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழில்களுக்கு, குறிப்பாக கட்டுமாணம் மற்றும் தயாரிப்புத்துறைகளில் ஆண்களுக்கு உயர்ந்த கேள்வி காணப்பட்டமையினதும் பெறுபேறாகும். மத்திய கிழக்குப் பிராந்தியத்திற்கு வெளியேயுள்ள நாடுகளில் தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்கின்ற இலக்குடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மரபுவழியற்ற சந்தைகளான கனடா, யப்பான், போலந்து, றோமானியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் புதிய சந்தை வாய்ப்புக்களை கண்டறிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**மத்திய கிழக்கு பிராந்தியம் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி, வீட்டுப்பணிப் பெண்களை பெரும்பான்மையாக உள்ளடக்கிய மொத்த குடிபெயர்ந்த தொழிற்படையில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானவற்றிற்கு வகை கூறியது.** எனினும், இவ்வாதிக்கம், கொரியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் மாலைதீவு போன்ற மற்றைய பல நாடுகளிலிருந்து மற்றைய வகைகளுக்கு அதிகரித்த வாய்ப்புக்கள் கிடைத்தமையின் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக, 2008இல் வீட்டுப்பணிப் பெண்களின் பங்கு 45 சதவீதத்திற்கு குறைவடைந்தது. வேலைத் தலங்களில் குடிபெயர்ந்தவர்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பு என்பனவற்றின் பொருட்டு கட்டார், பாரெயின் மற்றும் லிபியா ஆகிய மூன்று

**அட்டவணை 4.15 முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன்**

| | 2006 | 2007 | 2008(அ) |
|---|---|---|---|
| **நிலையான விலைகளில் (2002) மொ.உ.உ ரூ.மில்லியன்** | **2,090,564** | **2,232,656** | **2,365,500** |
| வேளாண்மை | 257,147 | 265,870 | 285,897 |
| கைத்தொழில் | 590,298 | 635,199 | 672,790 |
| பணிகள் | 1,243,119 | 1,331,587 | 1,406,814 |
| **தொழிலாளர் உற்பத்தித்திறன் ரூ.'000 ஆளுக்கு** | **294.2** | **317.0** | **329.7** |
| வேளாண்மை | 112.4 | 120.6 | 122.0 |
| கைத்தொழில் | 312.3 | 339.0 | 356.4 |
| பணிகள் | 424.6 | 449.0 | 478.0 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்புப் புள்ளிவிபர திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

முக்கிய தொழிலாளர்களைப் பெறும் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டமையின் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் எடுக்கப்பட்ட சாதகமான நடவடிக்கைகள் தொழிற்படையின் தொழிலில் கிடைப்பனவை அதிகரிக்கும். இத்தகைய வழிமுறைகளும் உலகப் பொருளாதார நெருக்கடியின் மூலம் எழக்கூடிய பாதகமான தாக்கங்களை சாதகமாக தீர்த்துவைக்கும். வெளிநாட்டு வேலைவாய்ப்பிலிருந்து நாடு பெறுகின்ற நன்மைகளைக் கருத்திற் கொண்டு, குடிபெயர்ந்த தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் தொழிற் பாதுகாப்பு தொடர்பாக பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மேலும் முயற்சிகளை எடுக்க வேண்டியவேளையில் சமூகத் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதும் தேவையாகவுள்ளது.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**கடந்த சில ஆண்டுகளாகக் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து முழுமொத்த தொழிலாளர் உற்பத்தித்திறன் 2008இல் தொடர்ந்தும் மேம்பட்டது.** தொழிலாளரொருவருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் (2002இன் நிலையான விலைகளில்) அளவிடப்பட்டவாறான தொழிலாளர் உற்பத்தித்திறன் கடந்த ஆண்டிலிருந்து 2008இல் ஏறத்தாழ 4 சதவீதத்தினால் தொழிலாளரொருவருக்கு ரூ.329,000 இற்கு அதிகரித்தது. உற்பத்தித்திறன் 2005இல் தொழிலாளரொருவருக்கு ரூ.286,000 இலிருந்து தற்போதைய மட்டங்களுக்கு அதிகரித்து சராசரியாக ஏறத்தாழ 5 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்து கடந்த சில ஆண்டுகளாக தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட அதிகரிப்பு 2008இல் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாக பங்களித்த வேளையில் வேளாண்மைத்துறையிலிருந்து கிடைத்த பங்களிப்பு மிகச் சிறிய அளவினதாகக் காணப்பட்டது.** 2008இல் உற்பத்தித்திறனில் கைத்தொழில் மற்றும் பணிகள்துறை முறையே 5.1 சதவீதம் மற்றும் 6.5 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்த வேளையில் வேளாண்மைத்துறை 1.2 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

**நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கும் விலை உறுதிப்பாட்டை பேணிக்கொள்வதற்கும் உற்பத்தித்திறனின் மேம்பாடு இன்றியமையாததாகும்.** தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலமும் தொழிற்படையின் தேர்ச்சியை அபிவிருத்தி செய்வதன் மூலமும் தொழிற் படையின் முகாமைத்துவத்தில்

**அட்டவணை 4.16** **தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்**

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனையவை(அ) | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை |
| 2005 | 17 | 4,283 | 8,370 | 40 | 49,282 | 149,982 | 57 | 53,565 | 158,352 |
| 2006 | 19 | 196,520 | 4,821,394 | 34 | 13,283 | 72,513 | 53 | 209,803 | 4,893,907 |
| 2007 | 8 | 1,468 | 5,489 | 17 | 6,079 | 33,748 | 25 | 7,547 | 39,237 |
| 1ஆம் காலாண்டு | 1 | 52 | 260 | 5 | 1,485 | 1,945 | 6 | 1,537 | 2,205 |
| 2ஆம் காலாண்டு | 1 | 233 | 233 | 5 | 2,267 | 20,384 | 6 | 2,500 | 20,617 |
| 3ஆம் காலாண்டு | 2 | 323 | 369 | 3 | 1,549 | 8,518 | 5 | 1,872 | 8,887 |
| 4ஆம் காலாண்டு | 4 | 860 | 4,627 | 4 | 778 | 2,901 | 8 | 1,638 | 7,528 |
| **2008 (ஆ)** | **34** | **34,014** | **41,525** | **17** | **3,917** | **24,130** | **51** | **37,931** | **6,5655** |
| 1ஆம் காலாண்டு | - | - | - | 6 | 1,649 | 12,359 | 6 | 1,649 | 12,359 |
| 2ஆம் காலாண்டு | 4 | 491 | 1,037 | 4 | 754 | 1,254 | 8 | 1,245 | 2,291 |
| 3ஆம் காலாண்டு | 22 | 31,648 | 33,609 | 4 | 870 | 955 | 26 | 32,518 | 34,564 |
| 4ஆம் காலாண்டு | 8 | 1,875 | 6,879 | 3 | 644 | 9,562 | 11 | 2,519 | 16,441 |

(அ) அரசசார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: தொழில் திணைக்களம்

புத்துருவாக்கமான வழிகளை கையாளுவதன் மூலமும் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்படுகின்றது. இதன் முக்கியத்துவத்தினை கருத்திற் கொண்டு, தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் ஆசிய உற்பத்தித்திறன் நிறுவனத்தின் கூட்டுறவுடன் செயற்படுவதற்காக தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தை அரசாங்கம் நிறுவியுள்ளது.

### தொழில் உறவுகள் மற்றும் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள்

**பெருந்தோட்டத்துறையில் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையின் விளைவாக 2008இல் தனியார்துறையில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 25 உடன் ஒப்பிடுகையில் 51 இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** 2008இல் இழக்கப்பட்ட மனித நாட்களின் மொத்தம் 2007இன் 39,237 உடன் ஒப்பிடுகையில் 65,655 இற்கு அதிகரித்தது. பெருந்தோட்டத்துறையில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2007இன் 8 வேலை நிறுத்தங்களுடன் ஒப்பிடுகையில் 2008இல் 34 இற்கு அதிகரித்தது. இழக்கப்பட்ட மனித நாட்களினதும் ஈடுபட்ட தொழிலாளரினதும் மொத்தம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான பெருந்தோட்ட தொழிலாளர்கள் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையே காரணமாகும். ஆண்டின் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக 22 வேலை நிறுத்தங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 31,648 தொழிலாளர் ஈடுபட்டு 33,609 மனித நாட்கள் இழக்கப்பட்டதன் காரணமாக பெருந்தோட்டத்துறையின் மீது அது தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. 2008இல் எஞ்சிய தனியார்துறையில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2007இன் 17 வேலை நிறுத்தங்களுடன் ஒப்பிடுகையில் மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும், இவ்வகையில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட வேலையாட்களின் எண்ணிக்கை 35 சதவீதத்திற்கும் கூடுதலாக மிகப்பெரியளவில் வீழ்ச்சியடைந்தமையினால் இழக்கப்பட்ட மொத்த மனித நாட்களின் எண்ணிக்கையும் 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இச் சாதகமான அபிவிருத்தி கட்சிகளுக்கிடையேயான சிறந்த உறவு முறைகள் மற்றும் கைத்தொழில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக வேலைத்தலங்களில் சிறந்த கலந்துரையாடல்கள் பேணுப்படுகின்றமை போன்ற பல்வேறு காரணிகளின் இணைந்த பெறுபேறாகும். அத்தகைய மிகச் சிறந்த சூழ்நிலையினைத் தொடர்ந்தும் பேணுதல் நாட்டில் முதலீட்டினையும் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதற்கு மிக இன்றியமையாததாகும்.

## 4.5 கொள்கைகளும் பிரச்சனைகளும்

**பொருளாதாரத்தில் தேர்ச்சி பெற்ற மனித வலுவுக்கான வழங்கலுக்கும் கேள்விக்குமிடையே தற்போதும் பொருத்தமற்ற தன்மை காணப்படுகிறது.** எனவே, கல்விச் சீர்திருத்தங்களின் அமுலாக்கம், தேசிய பாடசாலை பாடவிதானத்திற்கு தேவையான மாற்றங்களை அறிமுகப்படுத்தல், உலகளாவிய ரீதியில் பயன்படுத்தக்கூடிய தகுதியுடன் நாட்டில் தோற்றம் பெற்று வரும் தேவைகளுக்குப் பொருத்தமாயிருக்குமாறு பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் கற்கைநெறி நிகழ்ச்சித்திட்டங்களை நவீனப்படுத்துவதும் அத்தியாவசியமாகும். இம் மாற்றங்களுடன் சேர்ந்து உள்நாட்டு மற்றும் பன்னாட்டு தொழிலாளர் மாற்றமடைந்து வரும் நிலைமைகளை எதிர்கொள்வதற்கு ஏற்ற விதத்தில் தேர்ச்சி அபிவிருத்திக்கான பயனுறுதிமிக்க தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டம் பலப்படுத்தப்பட வேண்டும்.

**உற்பத்தித்திறனில் சரியான விகிதத்திலான மேம்பாடுகளை ஊக்குவிக்கும் பயனுறுதிமிக்க நிகழ்ச்சித்திட்டமின்றி மேற்கொள்ளப்படும் அரசதுறைக் கூலி அதிகரிப்புகள் உயர் உண்மைக் கூலி வீதங்களை விளைவித்து மோசமான இறைச் சிக்கலை ஏற்படுத்தும்.** உற்பத்தி மேம்பாடுகளின்றி மேற்கொள்ளப்படும் எந்தவொரு சம்பள மீளாய்வுகளும் குறிப்பாக நுகர்வுப் பொருட்கள் உள்ளிட்ட உள்நாட்டு விலைகளில் மேல் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தும். தனியார்துறை ஊழியர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் அவர்களின்

வேலையின் தன்மை என்பனவற்றின்படி அவர்கள் சம்பளத்தைப் பெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு பன்னாட்டு நியமங்களுடன் இணைந்து செல்லும்விதத்தில் தனியார்துறைக்கான தேசிய கூலிகள் கொள்கையை உருவாக்குவதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஊக்கமளிக்கும் அபிவிருத்தியாக விளங்குகிறது.

**உலகப் பொருளாதாரத்தின் சுருக்கங்கள் காரணமாக, இலங்கைப் பொருளாதாரமும் மோசமாக பாதிப்படைந்து குறிப்பாக தொழில்நிலை மட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.** இந்நெருக்கடி நாட்டின் தொழிலின்மையின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அதிகரித்துச் செல்லும் போக்கையும் நேர்மாறான நிலைக்கு இட்டுச் செல்லலாம். கைத்தொழில்துறையில் பல துறைகள் ஏற்கனவே ஆட் குறைப்பை எதிர்கொண்டதுடன் இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பயனுறுதியான தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலொழிய இது தொடர்ந்தும் இடம் பெறவே செய்யும். இது தொடர்பாக, தொழில் முயற்சிகள் கடினமான நேரங்களிலும் தாக்குப்பிடிப்பதனை இயலச் செய்யும் விதத்தில் மாற்றமடைகின்ற பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலையை எதிர்கொள்ளும் விதத்தில் தொழிற்சட்டங்களை நெகிழ்ச்சிப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.